APPROVED BY THE TEXT-BOOK COMMITTEE

# NEW TAMIL READER

## THIRD STANDARD

516
3.20

BY

C. R. NAMASIVAYA MUDALIAR

*Lecturer in Tamil, Queen Mary's College, Madras*

12 AUG 1920

MADRAS:

MY NAIDU & SONS

20

[Price 4 As.

TB
031,6 (ய)
N20
122681

நூதன

# மூன்றும் வாசக புஸ்தகம்

(நான்காம் வகுப்பு)

மேரீ மகாராணியார் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய
கா. நமச்சிவாய முதலியார்
எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :

ஸி. குமாரசாமி நாயடு ஸன்ஸ்

ரெஜிஸ்தர் செய்தது]  1920  விலை 4 அணா

PRINTED AT
THE COMMERCIAL PRESS,
MADRAS.

# நூதன
# மூன்றாம் வாசக
# புஸ்தகம்

## நமது இந்திய சக்ரவர்த்தியாகிய

## ஐந்தாம் - ஜார்ஜ் மகிபர்

## வாழ்த்துப் பாட்டு

('கல்லார்க்கும் கற்றவர்க்கும்' என்னும் மெட்டு)

1. உலகமெங்கும் புகழ்பெருகும்
உத்தமனும் மன்னன்
உயர்குணங்க ளெல்லாந்திரண்
டோருருவாம் மன்னன்

2. அலகில்பல தேசங்களை
ஆதரிக்கும் மன்னன
அல்லலெலாந் தீர்த்துநலம்
அருளவரும் மன்னன்

3. பலகலையும் தன்னறிவால்
பயின்றறிந்த மன்னன்
பயமனைத்தும் நீக்கிநம்மைப்
பாதுகாக்கும் மன்னன்

4. இலகுபல வேந்தருக்கும்
இறையவனு மன்னன்
எழில் 'ஐந்தாம் - ஜார்ஜ்'
என்றென்றும் வாழியவே.

# பொருள் அடக்கம்


| பாடம் | விஷயம் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | ஒற்றுமையால் ஓடையைக் கடந்தது | 1 |
| 2. | ஆடு | 5 |
| 3. | பூனையும் புலியும் | 9 |
| 4. | பாத்திரம் அறிந்து பிச்சையிடு | 14 |
| 5. | தண்ணீர் | 20 |
| 6. | பக்ஷிகளின் பாதங்கள் | 23 |
| 7. | கெடுவான் கேடு நினைப்பான்—I | 27 |
| 8. | கெடுவான் கேடு நினைப்பான்—II | 30 |
| 9. | வாத்தும் கோழியும் | 33 |
| 10. | மழை | 37 |
| 11. | மலைகள் | 40 |
| 12. | உடலின் அமைப்பு | 45 |
| 13. | பறக்கும் சிலந்தி | 50 |
| 14. | திருட்டு விசாரணை | 53 |
| 15. | வெட்டுக் கிளி | 57 |
| 16. | தும்பி | 60 |
| 17. | வேர் | 63 |
| 18. | நெற்களம் | 66 |
| 19. | ஜப்பானியச் சிறுவர்கள் | 71 |
| 20. | நாயின் நல்லறிவு | 75 |
| 21. | நாயின் வகைகள்—I | 79 |
| 22. | நாயின் வகைகள்—II | 84 |
| 23. | நாய் | 89 |
| 24. | முயல் சிங்கத்தைக் கொன்ற கதை | 90 |
| — | வெற்றி வேற்கை | 93 |



நூதன

# மூன்றும் வாசக புஸ்தகம்

## 1. ஒற்றுமையால் ஓடையைக் கடந்தது

ஆடுகள் கூட்டங் கூட்டமாக வசிக்கும். ஆட்டின் கூட்டத்திற்கு 'ஆட்டு மந்தை' என்று பெயர். செம்மறியாடு எப்போதும் சேர்ந்து வாழும். வெள்ளாடு



சில சமயங்களில் வேறாகப் பிரிந்து மேயும். 'கொழுத்த ஆடு கும்பலில் சேராது' என்று ஒரு பழமொழி உண்டு. அதைச் சாதாரணமாக வெள்ளாட்டுக்குச் சொல்லலாம்.

2. ஒரு காலத்தில் அதிக மழை பெய்து எங்கும் தண்ணீர் தேங்கி யிருந்தது. குளம் குட்டைகள் எல்லாம் நிறைந்திருந்தன. ஆற்றிலும் ஆற்றுக்கால்களிலும் நிறை வெள்ளம் போய்க்கொண்டு இருந்தது.

3. அப்போது ஒரு வெள்ளாடு ஊருக்கு வெளியே மேயப் போய்க்கொண்டு இருந்தது. வழியில் ஒரு நீரோடை குறுக்கிட்டது. அந்த நீரோடை கொஞ்சம் அகலமாக இருந்தபடியால், மனிதர் அதைக் கடந்துபோகக் குறுக்கே ஒரு பனைமரத்தைப் போட்டிருந்தார்கள். மனிதர்கள் சாதாரணமாக அந்த மரத்தின்மேலே நடந்து நீரோடையைக் கடப்பது வழக்கம். ஆடு அங்கே வந்ததும் ஓடையைக் கடக்க உற்றுக் கவனித்தது. வேறு வழி இல்லாமையால், அந்த மரத்தின் மேலேயே நடந்துபோகத் தீர்மானித்தது. அப்படியே அது அந்த மரத்தின்மீது கொஞ்ச தூரம் போயிற்று.

4. அப்போது அந்த ஓடையின் அக்கரையில் வேறொரு வெள்ளாடு வந்தது. அதுவும் ஓடையைக் கடந்து இந்தப் புறம் வர எண்ணிற்று ; எண்ணியபடியே மரத்தின்மேல் ஏறி, கொஞ்ச தூரம் வந்துவிட்டது. கொஞ்சங் கொஞ்சமாக நடந்து இரண்டும் மரத்தின் மத்தியில் வந்துவிட்டன. இந்தக் கரையில் இருந்த ஆடு அந்தக் கரைக்குப் போகவேண்டும் ; அந்தக் கரையில் இருந்த ஆடு இந்தக் கரைக்கு வரவேண்டும்.

5. இரண்டு ஆடுகளும் கிட்டி நெருங்கி விட்டன. ஒன்றுக்கொன்று பின் வாங்குவதாக இல்லை. இரண்டும் எதிர் எதிரே நின்றன. மண்டையோடு

மண்டையை முட்டிக் கொண்டன. சற்றே தவறி-ஞல் தண்ணீரில் விழுந்து விடுவோம் என்று அவை இரண்டும் உணர்ந்தன. தண்ணீரில் விழுந்தால் சாவ-வேண்டியதே என்று தேர்ந்தன. இனி, சண்டை-



யிட்டுக் காரியம் இல்லை. சமாதானமாகவே காரி-யத்தை முடிக்கவேண்டும் என்று இரண்டு ஆடுகளும் தெரிந்துகொண்டன.

6. பிறகு, இரண்டு ஆடுகளும் பொறுமையோடு நின்றன. ஒன்று, தான் சென்ற வழியே திரும்பி வந்துவிட்டால், மற்ருென்று சுலபமாக வந்துவிடும்; பிறகு நாம் போகலாம் என்று எண்ணிற்று. மரம் மிகவும் சிறுத்து இருந்ததனுல் திரும்பவும் கூட-வில்லை. என்ன செய்வதென்று இரண்டும் சிறிது

நேரம் யோசித்தன. அப்போது ஓர் ஆட்டுக்கு ஒரு யுக்தி தோன்றிற்று.



7. இரண்டு ஆடுகளில் ஒன்று மரத்தின்மேல் ஒடுங்கிப் படுத்துக் கொண்டது. உடனே மற்றோர் ஆடு, படுத்துக்கொண்ட ஆட்டின் முதுகின் மேல் தன் காலை ஊன்றி, அப்பால் குதித்துப் போய்விட்-டது. படுத்த ஆடு எழுந்து சுகமாக இக்கரை வந்து சேர்ந்தது. பின்பு அதது தான் தான் விரும்பிய வழியே போயிற்று.



## 2. ஆடு

ஆடு மிகவும் சாந்தமுள்ள ஜந்து ; அச்சக் குணம் உள்ளது ; தன்னைக் காத்துக் கொள்ளவும் வகை யற்றது ; தன் சத்துரு வரக்கண்டால் உடனே ஓட்டம் பிடிக்கும். ஆட்டில் செம்மாறியாடு என்னும் ஒரு வகை உண்டு. அது கள்ளங் கபடு ஒன்றும் அறியாது. வெள்ளாடு வெகு பதைபதைப்பு உள்ளது. அது உயர்வான மேடுகளிலும் உன்னதமான மலைகளிலும் அச்சமின்றி ஏறி, அங்கிருந்து சாயாமல் சருக்காமல் குதிக்கும்.

2. செம்மறியாட்டைவிட வெள்ளாடு உயரமானது. செம்மறியின் கொம்பு திருகலாய் இருக்கும். வெள்ளாட்டின் கொம்பு நீண்டு கூராக இருக்கும். வெள்ளாடு எதிரிகளைத் தன் கொம்பினால் முட்ட வரும். ஆட்டின் மண்டையோடு மிகவும் உறுதியானது. ஆடுகள் சண்டை யிடும்போது நீ பார்த்து

இருக்கிறாயா? ஆடுகள் சண்டை யிடும்போது மண்டையோடு மண்டையை மோதி இடித்துக்கொள்ளும்.

3. ஆட்டின் பற்களைப் பார்; மாட்டுக்கு இருப்பது போலவே ஆட்டுக்கும் இருக்கும். மேல் வாயின் முன் பக்கத்தில் பல் இல்லை. கீழ்ப் பக்கத்தில் மாத்திரம் பற்கள் வரிசையாக இருக்கின்றன. கடை வாய்ப் பற்கள் மேலும் கீழும் அமைந்து இருக்கின்றன. கடை வாய்ப் பல்லுக்கும் முன்பல்லுக்கும் இடையில் பற்கள் இல்லை. மாட்டுக்கும் இப்படி இருப்பது உனக்குத் தெரியும் அல்லவா? ஆட்டின் கழுத்தில் மணி கட்டினால், அது மேயும்போது மணிச் சத்தம் கேட்கும். ஏன் தெரியுமா? ஆடு மேயும்போது தலையை அசைத்து அசைத்து மேய்கிறது. குதிரை தலையை அசைக்காமலே மேயும்; இதற்குக் காரணம் என்ன? ஆட்டுக்கு மேல் வாயில் பல் இல்லாமையால் புல்லைப் பல்லினாலும் ஈறினாலும் பற்றி அழுத்திக்கொண்டு இழுக்கிறது. அதனால் ஆட்டின் தலை அசைகிறது. குதிரைக்கு மேலும் கீழும் பல் இருப்பதனால் அது புல்லைப் பல்லினால் கடித்து அருந்துகிறது.



4. ஆட்டுக்கு உடல் முழுதும் தடித்த மயிர் அடர்ந்து இருக்கிறது. அதனால் ஈ, கொசு முதலிய சிறு ஜந்துக்கள் ஆட்டின்மேல் உட்கார்ந்தால், அதற்கு ஒன்றும் உபத்திரவம் உண்டாகாது. மாடு, குதிரை முதலிய சில மிருகங்கள் தம்மேல் உட்காரும்

ஈ முதலிய ஜந்துக்களைத் தம் வாலினால் ஓட்டிக்கொள்கின்றன. ஆட்டுக்கு அப்படி ஓட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அதனால் ஆட்டுக்கு வால் குட்டையாக இருக்கிறது. இதைக்கொண்டே, 'ஆட்டுக்கு வால் அளவறுத்து இருக்கிறது' என்னும் பழமொழி வழங்குகிறது.

5. ஆட்டின் கால் சிறுத்து இருக்கிறது. அதனால் ஆடு விரைவாக ஓட அநுகூலமாக இருக்கும். ஆட்டின் குளம்பு பிளவுபட்டு இருக்கிறது; தலையில் கொம்பு உள்ள மிருகங்களுக்குப் பிளவு பட்ட குளம்பு உண்டென்பது உனக்குத் தெரியும் அல்லவா.



மாட்டுக்கு இருப்பது போலவே ஆட்டுக்கும் ஒவ்வொரு காலிலும் நான்கு விரல்கள் உண்டு. பெரிய விரல்கள் பூமியில் படிகின்றன. சிறிய விரல்கள் பாதத்திற்குச் சற்று மேலே இருப்பதனால் அவை பூமியில் படிவதில்லை.

6. ஆடு வயிறார மேய்ந்த பிறகு, ஓரிடத்தில் அமர்ந்து, அசைபோடும். அசைபோடுவது என்றால் என்ன? மேய்ந்து விழுங்கிய இரையை மறுபடியும் வாய்க்கு இழுத்து மெல்லுவது. விழுங்கிய இரையை மறுபடியும் வாய்க்குக் கொண்டுவர முடியுமா? நமக்கு முடியாது; ஆடு, மாடு முதலிய சில மிருகங்களுக்கு முடியும். நமக்கு ஒரே தீனிப் பை இருக்கிறது. ஆடு மாடுகளுக்கு நான்கு தீனிப் பைகள் உண்டு. ஆடு மேயும்போது இரைபோய் முதல் தீனிப் பையில் விழும். பிறகு, அது இரண்டாந்தீனிப் பையில் சென்று உருண்டைகள் ஆகும். பிறகு, ஆடு இரண்-

டாம் தீனிப்பையில் உள்ள உருண்டைகளை இழுத்து வாய்க்குக் கொண்டுவந்து, நன்றாய் மென்று விழுங்கும். அது போய் மூன்றும் பையில் விழுந்து ஜீர்ணமாகி, நாலாம் தீனிப் பைக்குச் செல்லும். இப்படிச் செய்வதற்கு 'அசை போடுவது' என்று சொல்வது வழக்கம்.



7. ஆடு பல வகையிலும் நமக்குப் பயன் படுகிறது. சிலர் அதன் மாமிசத்தைத் தின்கிறார்கள். ஆட்டின் தோல் அநேக விதத்தில் உபயோகப் படுகிறது. ஆட்டுத் தோலினால் செய்யப்படும் பொருள்கள் அதிக விலைபெறும். வெள்ளாட்டுப் பால் குழந்தைகளுக்கும் பலவீனர்களுக்கும் சிறந்த உணவு ஆகும்; தேகத்திற்குப் புஷ்டி கொடுக்கும். வெள்ளாட்டை 'எளியோர் பசு' என்று சொல்வது வழக்கம்.



## 3. பூனையும் புலியும்

புலி — அண்ணா பூனையாரே! அடியேன் வந்தனம் செய்கிறேன்.

பூனை — புலியப்பா! எங்கே நெடுநாளாக உன்னைக் காணோம்? எங்கேயாவது போயிருந்தாயா? அல்லது என்னை மறந்துவிட்டாயா?

புலி — அண்ணா! உன்னை மறந்துவிட்டால் எனக்குப் பிழைப்பு ஏது? என்ன செய்வேன்? நீ நாட்டில் இருக்கிறாய், நான் காட்டில் இருக்கிறேன். நான் நாட்டில் வந்தால் மனிதர் என்னைக் கொன்றுவிடுவார்கள். நீ என்ன செய்தாலும்

மனிதர்கள் உன்னைப் பக்ஷமாகப் பராமரிக்கிறார்கள். நான் அவர்களை என்ன செய்தேனோ தெரியவில்லை!

பூனை — என்ன செய்தாயா! நீ, மனிதருக்கு உதவி செய்யும் ஜந்துக்களை வதை செய்கிறாய்; நான் அவர்களுக்கு உபத்திரவம் செய்கிற ஜந்துக்களை வதை செய்து ஒழிக்கிறேன். நான் மனிதர்களிடத்தில் பழகி அவர்கள் அன்பைப் பெறுகிறேன். மனிதர் ஏமாந்தால் நீ அவர்களையே அடித்துக் கொல்லுகிறாய். அவர்கள் உன்னை வெறுக்க வேறு காரணமும் வேண்டுமா ?

புலி — ஆமாம், என்ன செய்வது! என் சுபாவம் அப்படி ஏற்பட்டுவிட்டது. இனிமேல் அதை மாற்ற முடியுமா? எப்படி இருந்தாலும் நான் உன் இனத்தைச் சார்ந்தவன். நீயும் என்னை வெறுக்கக் கூடாது. தயை செய்து எனக்கு ஏதாவது கற்றுக் கொடுத்தால், நான் காட்டிலேயே இருந்து காலந் தள்ளுகிறேன்.

பூனை — ஏதோ எனக்குத் தெரிந்ததைக் கற்றுக் கொடுக்கத் தடையில்லை. நான் செய்கிறதையே உனக்கும் சொல்லித் தருகிறேன். எனக்கு இருப்பதுபோலவே உனக்கும், உறுப்புகள் அமைந்திருக்கின்றன. நாம் பகலைவிட இரவில் நன்றாய்ப் பார்க்கக்கூடும். அதனால் நாம் இரவில் இரை தேடுவதே ஏற்றது. சந்துகளில் புகும்போது ஜாக்கிரதையாகப் புகவேண்டும். அதற்கு மீசை மயிரை அளவுக் கோலாக வைத்துக் கொள்ளவேண்டும். மீசை மயிர் தட்டாமல் இருக்கிற சந்துகளில் நாம் தாராளமாகப்

புகுந்து விடலாம். மீசை மயிர் தடைப்பட்டால் அங்கே தலையையும் நுழைக்கக்கூடாது.

புலி — அண்ணா! இரவில் நமக்கு இரை எப்படி அகப்படும்?

பூனை — முயல், மான் முதலிய ஜந்துக்கள் நம் இனத்தாருக்குப் பயந்து பகலில் பதுங்கியிருக்கும். இரவானால் தண்ணீர் குடிக்க வெளியே வரும். நீர் நிலைகளுக்கு அருகில் நீ மறைந்திருந்தால் அவைகள் வரும்போது பிடித்துக் கொள்ளலாம். இதுவன்றி இன்னொரு தந்திரமும் சொல்லுகிறேன் கேள். புதல் அடர்ந்த இடத்தண்டைப்போய் நீ உறுமினால், அங்கே பதுங்கியுள்ள மிருகங்கள் பயந்து ஓடும். அப்போது எதையாவது பின் பற்றி ஓடி அதைப் பிடித்துக் கொள்ளலாம்.

புலி — இதற்கெல்லாம் சந்தடி செய்யாமல் போக வேண்டுமே?

பூனை — சந்தடி செய்யாமல்தான் போகவேண்டும். நாம் நடந்தால் சத்தம் கேட்காது. நம்முடைய பாதம் மெத்தென்று இருக்கிறது. நமது நகங்கள் பூமியில் படுவதில்லை. அவைகளை நாம் வேண்டும்போது வெளியில் நீட்டலாம். வேண்டாதபோது உள்ளே சுருக்கிக் கொள்ளலாம். கடவுள் நமக்கு அநுகூலமாகத்தான் இப்படியெல்லாம் அமைத்திருக்கிறார்.

புலி — எல்லாம் சரிதான், இந்த வால் இருப்பது எனக்குப் பெருங் கஷ்டமாகத் தோன்றுகிறது. இதற்கு என்ன செய்யலாம்?

பூனே — வால் இருப்பது கஷ்டமாகவா தோன்று-கிறது. வால் இல்லாவிட்டால் நமது காரியம் நடை பெறாது. நாம் இரையைப் பிடிக்கும்-போது பாய்ந்து பிடிக்கிறோம். பாய்வதற்கு வால் அநுகூலமானது. நாம் பாயக் குறி பார்க்கும்போது வாலை ஆட்டிக்கொண்டேயிரு-ந்தால், அதன் உதவியால் குறி தவறாமல் பாய-லாம். சில சமயங்களில் வாலினாலும் பிராணி-களை அடித்து வீழ்த்தலாம்.



புலி — அண்ணா! என் உடல் ஏதோ இப்படி இருக்கிறது; இந்தக் கருங் கோடுகள் இல்-லாமல் உன் உடலைப்போல் சாம்பல் நிறமாக இருந்தால் நல்லது என்று எண்ணுகிறேன்.

பூனே — அப்படி நினையாதே. இப்படி இருப்பது-தான் உனக்கு ஏற்றது. நான் நாட்டில் இருப்-

பவன். நான் சாம்பல் நிறமாக இருக்கிறேன். என் உறவினர் வேறு நிறமாகவும் இருப்பது உண்டு. உன் நிறம் இந்தக் காட்டிலிருக்கும் மணலின் நிறம்போல் இருக்கிறது. பகலில் உன்னைப் பார்த்தால் விரைவில் தெரிந்து-கொள்ள முடியாது. கோடுகள் உனக்கும் அவ-சியந்தான், எனக்கும் அவசியந்தான். நான் பகலில் செடி மறைவில் இருந்தால், இலையின் நிழல் பூமியில் விழுவதுபோல் தோன்றும். அத-னால் பக்ஷிகள் ஏமாந்து தாமே என்னிடம் வந்துவிடும். நான் அவைகளைச் சுலபமாகப் பிடித்துக் கொல்லுவேன். நீயும் பகலில் புதல் நடுவில் படுத்திருந்தால் ஒருவர் கண்ணுக்கும் புலப்படமாட்டாய். உன் உடம்பிலுள்ள கருங் கோடுகளை இலையின் நிழல் என்று எண்ண இட-முண்டு. அதனால், மிருகங்கள் நீ இருக்கும் இடத்திற்குத் தாமே வந்துவிடும். அப்போது நீ அவைகளைப் பிடித்துக்கொள்ளலாம்.

புலி — அண்ணா ! நான் சுகமாக வாழ்வதற்கு ஏற்ற விதங்களை உன்னிடம் கற்றுக் கொண்டேன். அதற்காக அநேக வந்தனம் செய்கிறேன். இனி ஒருவர் தயவும் எனக்கு வேண்டியதில்லை என்று நினைக்கிறேன்.

பூனை — இனிமேல் ஒருவர் தயவு உனக்கு ஏன் ? நான் போய் வருகிறேன். இதோ மரத்தின்-மேல் ஒரு குருவி தங்கி யிருக்கிறது ; அதை நான் பிடிக்கப் போகிறேன்.

[மரத்தின்மேல் ஏறிக்கொண்டது.]

புலி — அண்ணு, அண்ணு மறந்தே போனேன். மரம் ஏறக் கற்றுக்கொள்ள மறந்து விட்டேன். இது ஒன்று மாத்திரம் எனக்குக் கற்றுக்கொடுத்துவிட்டால் போதும்.

பூனை — உனக்கா கற்றுக் கொடுப்பது. நன்றி கெட்ட உனக்கு நான் கற்றுக்கொடுக்கமாட்டேன். இனி, உனக்கு ஒருவர் தயவு ஏன் ? இன்னும் மரம் ஏறவும் கற்றுக் கொடுத்தால் உலகத்தையே அழித்து விடுவாய். இப்போது கற்றுக்கொண்டது போதும். ஓடிப் போ ; நான் போய் வருகிறேன்.

## 4. பாத்திரம் அறிந்து பிச்சை யிடு

'ஐயம் இட்டுண்' என்னும் வாக்கியத்தை நீங்கள் ஆத்திசூடியில் வாசித்து இருக்கிறீர்கள். நம்மால் இயன்ற வரையில் இல்லாதவர்களுக்குக் கொடுத்து நாமும் உண்ணவேண்டும். கையில் ஏதும் இல்லாவிட்டால், ஏற்பவர்களுக்கு இன்சொல் கூறி அனுப்ப வேண்டும். இதைப்பற்றியே, 'இருந்தால் கொடு; இல்லாவிட்டால் இன்சொல் கூறு' என்னும் நீதிவாக்கியம் பிறந்திருக்கிறது.

2. நாம் ஏதேனும் தானம் செய்தால், யோசித்துச் செய்ய வேண்டும். மனமிரங்கி அன்போடு செய்யுந் தானமே சிறந்தது. பெருமைக்காகச் செய்யும் தானம் சிறந்தது அன்று. பிறரிடத்தில் ஒரு பயனைக் கருதிச் செய்வதும் தருமம் ஆகாது.

3. யாசிக்கிறவனுக்கு எது அவசியமோ அதையே கொடுக்க வேண்டும். குளிரினுல் அவஸ்தைப் படுகிறவனுக்குப் பாதரக்ஷை தானம் செய்வதால் பயன் என்ன ? பசியால் பரிதவிக்கிறவனுக்கு வஸ்திரம் கொடுப்பதனுல் என்ன பிரயோஜனம்?

4. சிலர் தானம் செய்யப்போய் பாவத்தைத் தேடிக் கொள்ளுகிருர்கள். இது குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்ட கதை ஆகிறது. இதற்குத் திருஷ்டாந்தமாக ஒரு கதை சொல்லுவோம் :

5. ஓர் ஊரில் பணக்காரன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பொன், பூமி முதலிய பல வகையான ஆஸ்திகள் இருந்தன. அவன் மிகவும் இரக்கம் உள்ளவன். எளியோரைக் கண்டால் ஏதேனும் கொடாமல் போகமாட்டான். ஒருநாள் அவன் ஒரு வீதி வழியே போய்க்கொண்டு இருந்தான். பிச்சைக்காரன் ஒருவன் பிரபுவை அணுகி 'ஐயா, பசி காதை அடைக்கிறது. ஒரு காசு கொடுத்தால் ஏதேனும் வாங்கித் தின்று பசி யாறுவேன்' என்று கெஞ்சினுன். பிரபு மனம் இரங்கி, ஒரு காலணு எடுத்து, அவன் கையிற்கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

6. காலணுவைக் கையில் பெற்றதும் பிச்சைக்காரனுக்குக் கருத்து மாறிவிட்டது. அவன் உடனே சென்று, அந்தக்காலணுவுக்குத் தூண்டில்முள் வாங்கி, ஓர் ஏரியில் மீன் பிடிக்கத் தலைப்பட்டான். அன்று அவனுக்குப் பெரிய மீன்கள் பிடிபட்டன. பிச்சைக்காரன் அந்த மீன்களைக் கொண்டுபோய் நல்ல விலைக்கு விற்முன். பின்னும் அவன் நாள்தோறும் மீன் பிடித்து விற்க ஆரம்பித்தான். தினமும் அவ-

னுக்கு நல்ல மீன்கள் அகப்பட்டன. அவற்றை யெல்லாம் நல்ல விலைக்கு விற்று, கொஞ்சம் பணக்-காரன் ஆனான். பிறகு அவன் பெரிய வலைகள் வாங்கி, கட்டுமரத்தின்மேல் ஏறிக் கடலிற் சென்று, பெரிய மீன்களையும் அரிய மீன்களையும் பிடித்து விற்-றான். அதனால் அந்தப் பிச்சைக்காரன் நாளடைவில் அதிக பணக்காரன் ஆனான்.

7. பிச்சைக்காரனுக்கு அன்று ஒரு காலணா கொடுத்த பிரபுவுக்குக் கொஞ்சங் கொஞ்சமாகச் செல்வம் குறைய ஆரம்பித்தது. அவனுக்குப் பல-வகையிலும் செலவு நேரிட்டது. வியாபாரத்தில் நஷ்-டம் உண்டாயிற்று. பயிர் பச்சைகளில் நல்ல பலன் கிடைக்கவில்லை. பிச்சைக்காரன் மீன்பிடித்து, பணக்-காரன் ஆக ஆக, பிரபுவுக்குச் செல்வம் தேய்ந்து கொண்டேவந்தது. முடிவில் பிச்சைக்காரன் லக்ஷா-திகாரி யானான். லக்ஷாதிகாரியாக இருந்த பிரபு பிச்-சைக்காரன் ஆனான். நிலை கெட்ட பிரபு, தன் ஊரில் இருக்க இஷ்டமில்லாமல், வேறு ஊர்களில் போய் பிச்சை யெடுத்து வயிறு வளர்க்க ஆரம்பித்தான். இப்படிச் சில வருஷங்கள் சென்றன.

8. நிலைகெட்ட பிரபு ஒருநாள் பிச்சை யெடுத்-துக் கொண்டே ஒரு வீட்டுக்கு வந்தான். அது மெத்தை வீடு; வெகு விசித்திரமாக இருந்தது. பிரபுவாய் இருந்த பிச்சைக்காரன் அந்த வீட்டின் வாயிலில் நின்று பிச்சை கேட்டான். ஒருவரும் வர-வில்லை; உரத்துக் கத்தினான். உடனே அந்த வீட்-டின் சொந்தக்காரன் விரைந்து ஓடிவந்தான். பார்த்-தான் பிச்சைக்காரனை; அவனைக் கையெடுத்துக் கும்-பிட்டான்; காலில் விழுந்தான், எழுந்தான்; 'ஐயா,

பெருமானே ! தங்கள் கிருபையால் நான் தனவான் ஆனேன். தங்களுக்கு இப்படிப்பட்ட நிலை எப்படி வந்தது ?'' என்று கேட்டான்.

**பிச்சைக்காரன்**—'பிரபுவே ! என்னை ஏன் இப்படி ஏளனம் செய்கிறீர்கள் ? நான் ஒரு பிச்சைக்காரன்; என்னைத் தாங்கள் இப்படித் தொழவும் புகழவும் தகுமோ ?'' என்றான்.



**வீட்டுக்காரன்** — 'ஐயா, தங்களால் நான் தனவான் ஆனேன் ; இவை யாவும் தாங்கள் உதவிய செல்வங்களே' என்றான்.

**பிச்சைக்காரன்** — 'தாங்கள் இன்னமும் என்னை இவ்வாறு இழித்துப் பேசுவது சரியன்று. ஏதாவது

கொஞ்சம் பிச்சையிட்டால் நான் போய்விடுகிறேன்' என்று சொன்னான்.

வீட்டுக்காரன் — 'ஐயா, உம்மை எள்ளளவும் ஏளனம் செய்யவில்லை; உண்மையே சொல்லுகிறேன். நடந்த விஷயத்தைச் சொன்னால் தமக்கு நம்பிக்கை உண்டாகும்' என்றான்.

பிச்சைக்காரன் — 'என்ன நடந்தது? தயை செய்து சொல்லும்' என்று கேட்டான்.

வீட்டுக்காரன் — 'ஐயா, தாங்கள் ஒரு நாள் வண்டியில் போனீர்கள்; கடை வீதியில் வண்டி சற்று நின்றது. அப்பொழுது நான் வந்து, "பசி காதை அடைக்கிறது; ஒரு காசு கொடுத்தால் ஏதேனும் வாங்கித் தின்று பசியாறுவேன்" என்று கேட்டேன். தாங்கள் ஒரு காலணா கொடுத்தீர்கள். அந்தக் காலணாவே இந்தப் பெருஞ் செல்வம் உண்டாவதற்குக் காரணமாக இருந்தது' என்று சொன்னான்.

பிச்சைக்காரன் — 'காலணா கொடுத்தது நினைவுக்கு வருகிறது; காலணா எப்படி இவ்வளவு செல்வத்திற்குக் காரணமாகும்?' என்று கேட்டான்.

வீட்டுக்காரன் — 'தாங்கள் கொடுத்த காலணாவைப் பெற்றுக்கொண்ட வுடனே அதைக்கொண்டு ஏதேனும் ஒரு தொழில் செய்யவேண்டும் என்று எண்ணினேன். காலணாவைக் கொண்டு என்ன தொழில் செய்கிறதென்று நெடுநேரம் யோசித்து, முடிவில் ஒரு தூண்டில் வாங்கினேன். அதைக்கொண்டு மீன் பிடித்து விற்கத் தலைப்பட்டேன். நீங்கள் நல்ல மனத்தோடு தானம் செய்தமையால், எனக்கு நல்ல மீன்களே கிடைத்தன. அதை நாள்-

தோறும் விற்று, இந்தச் செல்வத்தை அடைந்தேன்' என்றான்.

**பிச்சைக்காரன் —** 'ஐயோ, என் காலணாவா உன் செல்வத்திற்குக் காரணமாக இருந்தது. என் காலணா உன் செல்வத்திற்குக் காரணமாக இருக்க-வில்லை; இத்தனை ஆயிரம் மீன்கள் சாவதற்குக் கார-ணமாக இருந்தது. நான் செய்த தானத்தின் பலனை இன்றுதான் உணர்ந்தேன். அந்தக் காலணாவை உன் கையில் கொடாமல், உன் பசியடங்க ஏதேனும் பண்டம் வாங்கிக் கொடுத்திருந்தால் இவ்வளவு பாவம் எனக்கு நேர்ந்து இராதே. அந்தப் பாவத்தின் காரணமாக என் பணம் எல்லாம் போயிற்று. இனி என்ன செய்வது' என்று விசனத்துடன் சொன்னான்.

**வீட்டுக்காரன் —** 'ஐயா! தாம் வருந்தவேண்-டாம். எனக்கும் இப்போதுதான் தெரிகிறது; என்ன செய்கிறது! இதில் பாதி திரவியத்தைத் தாங்கள் பெற்றுக்கொண்டு, என்னை மன்னிக்க வேண்டும்' என்று வேண்டினான்.

பிறகு இருவரும் சேர்ந்து, அந்தப் பொருளில் பல தரும காரியங்கள் செய்தார்கள். தானம் செய்-யும்போதெல்லாம் யோசித்து ஏற்றவாறு செய்தார்-கள். மற்றத் தொகையைக் கொண்டு அவர்கள் பெரிய வியாபாரம் செய்து, இருவரும் சுகமாக ஜீவித்து வந்தார்கள்.

# 5. தண்ணீர்

சுத்த ஜலத்திற்கு நிறமும் சுவையும் மணமும் இல்லை என்று முன்பு நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். பின்பு, தண்ணீருக்கு வடிவம் இல்லை. அது தங்கும் இடத்தின் வடிவத்தையே அடைகிறது என்பதையும் அறிந்திருக்கிறீர்கள்.

2. இனி, தண்ணீருக்குள்ள 'பாயும் சக்தி' யை ஆராய்வோம். ஒரு மண்குடத்தில் நிறையத் தண்ணீர் மொண்டால், அதிலுள்ள தண்ணீர் அந்தக் குடத்தின் வடிவத்தை அடைகின்றது. அந்தக் குடத்தைத் தூக்கி மேலே கட்டிவிட்டால், குடம் அந்தரத்தில் தொங்கிக்கொண்டு இருக்கும்.

3. இப்போது ஒரு சிறு ஆணி எடுத்து, குடத்தின் வலப் புறத்தில் குத்தி, சிறு தொளை ஒன்று உண்டாகும்படி செய்தால், உடனே குடத்தில் உள்ள தண்ணீர் தொளையுள்ள பக்கத்தில் வேகமாகப் பாய ஆரம்பிக்கும். முன்பு செய்த தொளையின்கீழ் மற்றொரு தொளை செய்தால், தண்ணீர் மேல் துவாரத்தில் பாயும் வேகத்தைவிட அதிக வேகமாகக் கீழ்த் துவாரத்தில் பாய ஆரம்பிக்கும்.



4. பிறகு, அந்தக் குடத்தின் இடப் பக்கமாக ஒரு தொளை செய்தால், தண்ணீர் இடது பக்கமாகவும் பாய ஆரம்பிக்கும். இங்கும் மேல் தொளைக்குக் கீழ் மற்றொரு தொளை செய்தால், மேல் தொளையில் பாய்வதைவிடக் கீழ்த் தொளையில் தண்ணீர் அதிக வேகமாகப் பாய ஆரம்பிக்கும். இதனால்

தண்ணீருக்குப் பக்கவாட்டமாய்ப் பாயும் சக்தி உண்டு என்று தெரிகிறது.



5. இனி, குடத்தின் அடிப்புறத்தில் ஒரு தொளை செய்தால், தண்ணீர் பக்கங்களிற் பாய்வதை விட அதிக வேகமாகப் பாய ஆரம்பிக்கும். இதனால் தண்ணீருக்குக் கீழ் நோக்கிப் பாயும் சக்தி உண்டு என்பது தெளிவாகத் தெரிகிறது. இப்போது நாம்செய்த பரீக்ஷையால் தண்ணீருக்கு வலப்புறம், இடப் புறம், கீழ்ப்புறம் ஆகிய மூன்று பக்கங்களில் பாயும் சக்தி உண்டென்று உணர்ந்துகொண்டோம்.



6. வலப்புறம், இடப்புறம், அடிப்புறம் ஆகிய மூன்று புறங்கள் போனால் மேற்புறம் என்பது ஒன்று இருக்கிறது. தண்ணீருக்கு மேற்புறமாகப் பாயும் சக்தியும் உண்டோ என்பதை இனிப் பரீக்ஷித்துப் பார்ப்போம்.

7. வாய் அகன்ற ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில், தண்ணீர் முகந்துகொள். அதில் ஒரு துண்டு சடை (நெட்டி) யைப் போடு. அந்தச் சடை தண்ணீரின் மேல் மிதக்க ஆரம்பிக்கும். சடை தண்ணீரின்மேல் ஏன் மிதக்குகிறது? மிதக்கும் சடையை உன் விரலினால் அழுத்தி, தண்ணீரின் அடிவரையில் கொண்டுபோ. பிறகு உன் விரலை மெல்ல எடு.



அப்போது என்ன உண்டாகிறது சொல், பார்ப்போம். நீ விரலை எடுக்கும்போது சடை விரலோடு



ஒட்டினாற்போல் கீழிருந்து மேலே எழுகின்றது. அதாவது அடியிலிருந்து ஒருவன் சடையை மேலுக்குத் தள்ளுவது போல் இருக்கிறது. தண்ணீரின் மேலெழும் சக்திதான் இப்படிச் செய்கிறது. இதனால் தண்ணீருக்கு மேல் நோக்கிப்பாயும் சக்தியும் இருக்கிறதென்று தெரிகிறது.

8. தண்ணீரின்மேல் சடை மிதக்குகிறதே, கல் ஏன் மிதப்பதில்லை? ஆமாம், இதைத் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியந்தான். சடை நீரின்மேல் மிதக்குகிறது. கல் தண்ணீரில் மூழ்கிப்போய்,



அடியில் படிந்திருக்கிறது. தண்ணீருக்குள்ள மேல்நோக்கி எழும் சக்தி சடையின் கனத்தைவிட வலியதாக இருப்பதனால், அந்தச் சக்தியை அழுத்திக்கொண்டு கீழே செல்லச் சடைக்கு முடியவில்லை. அதனால், சடை தண்ணீரின்மேல் மிதக்குகிறது. தண்ணீருக்குள்ள மேல்நோக்கி எழும் சக்தி கல்லின் கனத்தைவிடக் குறைவாக இருப்பதனால் அந்தக் கல் தண்ணீரின் வேகத்தை அழுத்திக்கொண்டு கீழே சென்று படிகிறது.

9. ஒரு வஸ்திரத்தைத் தண்ணீரின்மேல் போட்டால்; அது கொஞ்சநேரம் மிதக்குகிறது. வஸ்திரம் தண்ணீரில் ஊறினால், அது நீருக்குள் அமிழ்ந்துவிடுகிறது. வஸ்திரம் நனையாதிருந்த போது தண்-

ணீருக்குள்ள மேலெழும் சக்தி துணியைத் தாங்கிக்-கொள்ளக் கூடியதாக இருந்தது. வஸ்திரம் நனைந்த பிறகு நீருக்குள்ள மேலெழும் சக்தி அதைத் தாங்கிக்-கொள்ள முடியவில்லை: அதனால் வஸ்திரம் நீரின் வேகத்தை அழுத்திக்கொண்டு அமிழ்ந்து அடிக்குப் போய்விடுகிறது.

9. மேலே செய்த பரீக்ஷைகளால் மேல் நோக்கி எழும் சக்தியும் தண்ணீருக்கு இருக்கிறதென்பது தெளிவாயிற்று. ஆகவே, தண்ணீருக்கு வலப்பக்கம், இடப்பக்கம், கீழ்ப்பக்கம், மேற்பக்கம் ஆகிய நான்கு பக்கங்களிலும் பாயும் சக்தி உண்டென்பதை உணர்ந்து கொண்டோம்.

## 6. பக்ஷிகளின் பாதங்கள்

பக்ஷிகளின் பாதங்கள் பல விதமாக வேறுபட்டு இருக்கின்றன. ஒவ்வொரு பக்ஷிக்கும் அதனதன் தன்மைக்கு ஏற்றபடி பாதங்கள் அமைந்து இருக்கின்-றன. சில பக்ஷிகள் தம் பாதங்களால் தமது இரை-களைப் பற்றுகின்றன. சில பக்ஷிகள் தம் பாதங்-களால் நடக்கின்றன. சில தம் பாதங்களால் தண்-ணீரில் நீந்துகின்றன. சில தம் பாதங்களால் மரக் கிளைகளைப் பற்றிக்கொள்கின்றன.

2. சாதாரணமாகப் பக்ஷிகளுக் கெல்லாம் நான்கு விரல்கள் உண்டு. நான்கு விரல்களுக்கு அதிகமாக எந்தப் பக்ஷிக்கும் இருப்பதில்லை. எமு முதலிய சில பக்ஷிகளுக்கு மூன்று விரல்கள் உண்டு. தீப் பறவைக்கு இரண்டே விரல்கள் இருக்கின்றன.

3. இங்கே சில பக்ஷிகளின் பாதங்களையும் அவை அந்தப் பக்ஷிகளுக்கு உபயோகமாகும் விதத்தையும் விளக்குவோம். இவற்றை நன்றாய்க் கவனித்து, மற்றப் பறவைகளின் பாதங்களைப் பற்றியும் நீங்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

4. இது கோழியின் பாதம். இதில் முன்புறம் மூன்று விரல்களும் பின்புறம் ஒரு விரலும் அமைந்து இருக்கின்றன. இது நடக்கும் பறவையாதலால், விரல்கள் நீண்டு நன்றாய் அசையக் கூடியவைகளாக இயன்று இருக்கின்றன. இவ்விரல்களின் நுனியில் உள்ள நகங்கள் தடித்து இருப்பதால், தரையைக் கீறுவதற்கும் குப்பைகளைச் சீய்ப்பதற்கும் அவை அதிக அநுகூலமுள்ளவைகளாக இருக்கின்றன.



5. வாத்தின் பாதத்திலும் நான்கு விரல்கள் உண்டு. முன் புறத்தில் உள்ள மூன்று விரல்களும் மெல்லிய தோலினால் ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன. பின்விரல் ஒன்று மாத்திரம் பிரிந்து இருக்கிறது. இதற்குத் தோலடி என்று பெயர். வாத்து தண்ணீரில் நீந்தும் பறவை யாதலால், தோலடி அதற்கு மிகவும் அநுகூலமாக இருக்கிறது. நீர்வாத்து முதலிய சில பக்ஷிகளுக்கும் தோலடி உண்டு.



அந்தப் பக்ஷிகள் தம் தோலடியின் உதவியால் தண்ணீரில் நீந்தி இரை தேடித் தின்று ஜீவிக்கின்றன.

6. கிளியின் பாதத்தில் இரண்டு விரல்கள் முன்னும் இரண்டு விரல்கள் பின்னுமாகப் பிரிந்திருக்கின்றன. மரத்தில் தொத்தி ஏறுவதற்கு அநுகூலமாக விரல்கள் அமைந்து இருக்கின்றன. இவை மரக்கிளைகளை உறுதியாகப் பிடிப்பதற்கும் ஏற்றபடி இயன்றிருக்கின்றன. மரங்குத்தி முதலிய சில பறவைகளுக்கும் விரல்கள் இவ்வாறே அமைந்து இருக்கின்றன. இவைகளுக்குத் தொத்தியேறும் பறவைகள் என்று பெயர்.



7. இவை கழுகின் கால் விரல்கள். முன்புறம் மூன்றும் பின்புறம் ஒன்றுமாகப் பிரிந்து இருக்கின்றன. விரல்கள் கனத்து உறுதியாக இருக்கின்றன. நகங்கள் வளைந்து வெகு கூர்மையாக இருப்பதைப் பார். அவை இரையைப் பற்றிக்கொண்டு போவதற்கு ஏற்றவாறு இருக்கின்றன. கருடன் முதலிய சில பறவைகளுக்கும் பாதங்கள் இவ்வாறே அமைந்திருக்கின்றன.





8. ஆந்தையின் விரல்களும் இரையைப் பிடிப்பதற்கு ஏற்றவாறு அமைந்து இருக்கின்றன. நகங்கள் மிகவும் வளைந்து வெகு கூர்மையாக இருக்கின்றன. எலி முதலியவற்றைப் பிடித்து, அவற்றின் உடலைக் கிழிக்க ஏற்றவாறு நகங்கள் அமைந்திருக்கின்றன.

9. நெருப்புக் கோழி ஓடும் பறவை. இதற்குக் கால்கள் வெகு நீளம். நீண்ட கால்கள் இருப்பதனுல் இந்தப் பக்ஷி வெகு விரைவாக ஓடுகிறது. நெருப்புக் கோழியின் பாதத்தில்இரண்டே விரல்கள் இருக்கின்றன. பாதம் நன்ருய் அகன்று இருப்பதனுல் மணலில் ஓட அநுகூலமாக இருக்கின்றது. இரண்டாம் விரலில் மாத்திரம் நகம் இருக்கிறது. அதுவும் ஓடுவதற்கு அநுகூலமாக அமைந்து இருக்கிறது.



10. கொக்கின் கால்கள் நீண்டு பசுமை நிறமாக இருக்கின்றன. தண்ணீரில் கொக்குநின்றுகொண்டுஇருக்கும்போது, அதன் காலுக்கும் நீர்ப் பூண்டின் அடிக்கும் அவ்வளவாக வித்தியாசம் தோன்ருது. விரல்களும் நகங்களும் வெகு நீளமாக இருக்கின்றன. அவை தாமரை இலை முதலிய அகன்ற இலைகளின் மேல் நடந்து போகவும் அதிக அநுகூலமாக இருக்கும்.





## 7. கெடுவான் கேடு நினைப்பான் — I

ஒரு காட்டில் காகமும் மானும் நட்புக் கொண்டு இருந்தன. மான் காலையில் எழுந்துபோய் மேய்ந்துவிட்டு மாலையானதும் ஒரு மரத்தண்டை வந்து சேரும். காகமும் காலையில் எழுந்து பறந்து போய் அகப்பட்ட இரையை அருந்திவிட்டு, அந்த மரத்திற்கு வரும். இரவு முழுதும் காகம் மரத்தின்மேல் உட்கார்ந்து நித்திரை செய்யும்; மான் அந்த மரத்தின் கீழே படுத்து உறங்கும்.

2. இவ்வாறு இரண்டும் நெடுங்காலம் இணை பிரியாமல் வாழ்ந்திருந்தன. ஒரு நாள் அந்த மான், தன்னோடு ஒரு நரியை அழைத்துக்கொண்டு மரத்தண்டை வந்தது. அப்போது காகம் மானைப் பார்த்து, 'நண்பா! உன் அண்டையில் இருப்பவன் யார்? எங்கே வந்தான்?' என்று கேட்டது.

மான் — 'அண்ணா! இவன் ஒரு ஜம்புகன், இவன் நம்மோடு கலந்து நேசிக்க விரும்புகிறான்' என்றது.

காகம் — 'அப்படியா, முன் பின் தெரியாமல் ஒருவரோடு நாம் சினேகிக்கலாமா? பார்த்தவுடனே சினேகிப்பது நல்லது அன்று' எனச் சொல்லிற்று.

மான் — 'அது உண்மைதான், ஏதோ வந்துவிட்டான். நானும் அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன். இனிமேல் நாம் அவனைப் போகச் சொல்வது நியாயமா?' என்று கேட்டது.

காகம் — 'எனக்கு ஒன்றுமில்லை, நான் மரத்தின் மேலே இருக்கிறேன். நீதான் கீழே இருக்கப்போகிறாய். அவன் உன்னோடுதான் இருப்பான். ஆகையால், எதையும் நன்றாய் யோசித்துச் செய்' என்று சொல்லிற்று.

மான் — 'அவன் என்ன செய்யப்போகிறான். நம்மைப் போல் அவனும் வெளியிலே போய் கிடைத்ததைத் தின்றுவிட்டு வரப் போகிறான். இரவில்மட்டும் இங்கே தங்கியிருந்து நமக்குத் துணையாக இருப்பான்' என்றது.

காகம் — 'ஆனால் உன் இஷ்டம், அப்படியே செய், ஏதாவது ஆபத்து நேர்ந்தால், பிறகு வருத்தப் படாதே' என்று சொல்லிற்று.

3. பிறகு, காகம், மான், நரி ஆகிய மூன்றும் பகலில் வெளியே போய், இரவில் அந்த மரத்தண்டை வந்து வசித்துக்கொண்டு இருந்தன. காகம் மாத்திரம் நரியோடு அவ்வளவாகக் கலந்து கொள்வது இல்லை. நரி மானைப் பார்க்கும்போதெல்லாம், இதை எப்போது நமக்கு இரையாக்கிக் கொள்ளலாம் என்று எண்ணும். இந்த மானை ஏதாவது சங்கடத்தில் மாட்டிவிட்டு, வேடிக்கை பார்க்கவேண்டும் என்று தீர்மானித்தது.

4. ஒருநாள் நரி மானைப் பார்த்து, 'சிநேகிதா! ஏன் வாட்டமாக இருக்கிறாய்? இரை அகப்படவில்லையா? நான் இன்று ஓர் இடம் பார்த்தேன், புல் நன்றாய் வளர்ந்து, பச்சைப்பசேல் என்று இருக்கிறது. ஒரு வருஷத்திற்கு வேண்டுமானாலும் உணவு கிடைக்கும். காலையில் என்னோடு வா, காட்டுகிறேன். நான் அதைப் பார்த்தவுடனே உன்னை நினைத்துக்கொண்டேன்' என்று சொல்லிற்று. மான் நரியின் சொல்லை நம்பி, மறுநாள் காலையில் அதனோடு போயிற்று. நரி, தான் பார்த்த இடத்தை மானுக்குக் காட்டிற்று. மான் அங்கே விளைந்திருந்த நெற்பயிரைப் புல் என்று எண்ணி மேய ஆரம்பித்தது; மாலையானதும் மரத்தண்டை வந்து விட்டது. நரியும் அங்கு வந்து சேர்ந்தது. அப்போது மான் நரியைப் பார்த்து, 'நண்பா! இன்று எனக்கு நல்ல உணவு கிடைத்தது. இஷ்டமான அளவு மேய்ந்தேன். இனி, எனக்கு உணவைப்பற்றிக் கவலையே இல்லை' என்று

சந்தோஷத்துடன் சொல்லிற்று. 'நான் இவ்வளவாவது உனக்குச் செய்யவேண்டாமா?' என்று நரி பெருமையுடன் பேசிற்று.

## 8. கெடுவான் கேடு நினைப்பான்—II

வேளாளன் தன் வயலை வந்து பார்த்தான். பயிர் அங்கங்கே கடியுண்டு கிடப்பதைக் கண்டான்; மிகவும் வருந்தினன். பிறகு, அந்த வயலில் ஒரு வலை கட்டிவைத்தான்.

2. மான் மறுநாளும் அங்கே மேயப் போயிற்று. அது அதிக ஆவலோடு மேய்ந்துகொண்டே போய், வலையில் அகப்பட்டுக் கொண்டது. மான் திகில் அடைந்து, இப்படியும் அப்படியும் இழுத்துப் பார்த்தது; எப்படி இழுத்தும் முடியவில்லை. வலை மானை நன்ருய் இறுக்கிக்கொண்டது. அப்பொழுது நரி மெல்ல நடந்து, அந்த வழியே வந்து, மான் வலையில் அகப்பட்டுக்கொண்டு வருந்துவதைக் கண்டது. பிறகு, நரி மானின் அருகில் சென்று,'நண்பா! என்ன இது ? எப்படி இந்த வலையில் அகப்பட்டுக் கொண்டாய் ? முன் பின் பார்த்துக் காரியம் செய்ய வேண்டாமா ?' என்று கேட்டது.

3. அப்போது மான், 'அன்பா ! என்னைப் பலவாறு கேட்டுப் பயனில்லை; எப்படியோ அகப்பட்டுக் கொண்டேன். இப்போது என்னை விடுதலை செய்வது உன் கடமை. சீக்கிரம் வலையைக் கடித்து, என்னை விடுதலை செய்' என்று சொல்லிற்று. அதற்கு நரி, 'அன்பா ! என்னை மன்னிக்க வேண்டும். நான்

சினேகிதனுக்காக உயிரையும் கொடுக்கக் கூடியவன். இன்று எனக்கு விரத தினம்; தோலைத் தீண்டமாட்டேன். என்ன செய்வேன்?' என்று சொல்லிக்கொண்டே ஓடிப்போய்விட்டது. மான் திகிலடைந்து, சுற்று முற்றும் பார்த்துக்கொண்டு இருந்தது.

4. மாலை யானதும் காகம் வந்து மரத்தின்மேல் உட்கார்ந்தது. மான் வரவில்லை. இரவெல்லாம் பார்த்தது; மான் வரவே இல்லை. நரியும் வரவில்லை. அதனால், மானுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்தது என்று காகம் நினைத்தது. மறுநாள் அது காலையில் எழுந்து, பல பக்கங்களிலும் பறந்து சென்றது; ஓர் இடத்தில் மான் வலையில் அகப்பட்டுக்கொண்டு அவஸ்தைப் படுவதைக் கண்டது. உடனே காகம் அங்கு இறங்கி, 'நண்பா, என்ன இது! உன் நண்பன் எங்கே?' என்று கேட்டது. நண்பனை, 'அவன் என் எலும்பைக் கடிக்க இங்கு எங்கேயோ மறைந்து இருக்கிறான். என் ஆபத்தை நீக்க ஏதும் உபாயம் இல்லையா?' என்று விசனத்துடன் கேட்டது.

5. அப்போது காகம், 'அன்ப! நான் ஒன்று சொல்லுகிறேன்; அப்படிச் செய்தால் ஒருவாறு தப்பலாம். நீ செத்தாற்போல் படுத்துக்கொள், நான் உன் கண்ணைப் பொய்யாகக் குத்துகிறேன். குடியானவன் வந்து, நீ செத்தாய் என்று எண்ணி வலையை அவிழ்த்துச் சுருட்டிக் கட்டி அப்புறம் வைக்கப் போவான். போனதும் நான் கத்துகிறேன். உடனே நீ எழுந்து ஓட்டம் பிடி' என்றது. அப்போது குடியானவன் அங்கே வந்தான். காகம் மானின் கண்ணைக் குத்துவதைக் குடியானவன் கண்டு, மான் மரித்தது என்று எண்ணி, வலையை

அவிழ்த்து அப்புறம் வைக்கப் போனான். அதுகண்டு காகம் கத்திற்று. உடனே மான் எழுந்து ஓட்டம் பிடித்தது. குடியானவன் வயிறு எரிந்து, தன் கையில் இருந்த தடியை மானின்மேல் விசிறி எறிந்தான். அந்தத் தடி அங்கு மறைந்திருந்த நரியின்-



மேல் படவே, நரி கால் ஒடிந்து இறந்துபட்டது. மானும் காகமும் மரத்தண்டை வந்து சேர்ந்தன. மான் உயிர் தப்பியதைக் குறித்து இரண்டும் சந்தோஷம் அடைந்தன.

6. பிறகு, காகம் பறந்து அந்த வயலண்டை வந்து, நரி இறந்து கிடப்பதையும் குடியானவன் அதன் காலைப் பிடித்து இழுத்துக்கொண்டு போவ-

தையும் கண்டது. பின்பு அக் காகம் மரத்தண்டை வந்து இந்த விஷயத்தை மானுடன் சொல்லிற்று. மான் அதைக் கேட்டு, 'கெடுவான் கேடு நினைப் பான்' என்னும் பழமொழி பொய்யாகுமா ? என்று சொல்லிற்று. பிறகு இரண்டும் அங்கே சுகமாக வாழ்ந்திருந்தன.

## 9. வாத்தும் கோழியும்

'ஓகோ, பெட்டைக் கோழிப் பெருமாட்டியாரே, சலாம்' என்று வாத்து வந்தனஞ் செய்தது. 'வாரும், வாரும், அநேக சலாம், இப்போதுதான் வருகிறீ-ரோ ?' என்று பெட்டைக்கோழி கேட்டது.

2. 'அம்மா ! நாம் இருவரும் வெளியே சென்று வெகு காலம் ஆயிற்று ; இன்றுவது உலாவி வரலாம் என்று எண்ணி இப்படி வந்தேன். கொஞ்சநேரம் போய்வரலாமே ?' என்று கேட்டது வாத்து.

3. 'அதற்கு என்ன ஆக்ஷேபம், அப்படியே போகலாம். உம்மோடு வெளியே வருவதானல் எனக்கு வெகு சந்தோஷம். இங்கு இருந்து அவஸ்-தைப்படுவதை விட, வெளியில் போனாலும் விதவித-மான உணவுகளை வேண்டியமட்டும் உண்டு களிக்க-லாம்' என்றது பெட்டை.

4. 'பெருமாட்டி, இங்கே ஓர் அழகான குளம் இருக்கிறது ; நாம் இருவரும் இதில் இறங்கி நீந்தி விளையாடலாமா ?' என்று வாத்து கேட்டது.

5. 'நீந்துவதா! அப்பப்பா, என்னால் முடியாது' தண்ணீரில் இறங்கினால் நான் தவிக்கவேண்டிவரும்! என்றது பெட்டைக்கோழி.



6. 'நான் இருக்கும்போது உனக்கென்ன பயம்? உனக்கு ஓர் ஆபத்து வந்தால் நான் பார்த்துக் கொண்டு இருப்பேனா? பயப்படாமல் வா' என்று வாத்து கூப்பிட்டது.

7. 'அனுகூலம் இருந்தால் யாருக்கும் அச்சம் இராது. தண்ணீரில் நீந்த உனக்கு இருப்பதுபோல எனக்கு ஏதும் அநுகூலம் இல்லே. தண்ணீரில் இறங்கினல், என் இறகெல்லாம் நனேந்துவிடும்; பிறகு, எனக்கு அதிக கஷ்டமுண்டாகும்' என்று பெட்டை சொல்லிற்று.

8. 'என்ன இது, நீ சொல்வது ஆச்சரியமாக இருக்கிறது. நான் எப்போது வேண்டுமானுலும் தண்ணீரில் இறங்குவேன்; சந்தோஷமாக நீந்துவேன். தரையிலும் இருப்பேன். தண்ணீரென்றும் தரை யென்றும் எனக்குப் பேதமே இல்லே. தண்ணீரில் இருந்தால் என் இறகு நனேய வில்லேயே. மழை பெய்தாலும் நான் நின்ற இடத்திலேயே இருப்பேன். மழைத் தண்ணீர் என்மேல் விழுந்தால், அது தங்க முடியாமல் கீழே விழுந்துவிடும்' என்றது வாத்து.

9. 'சரிதான், உன் இறகுக்கும் என் இறகுக்கும் வித்தியாசம் இருப்பது போல் காண்கிறது. உன் இறகில் ஏதோ ஒரு வகை நெய்ப் பசை இருக்க வேண்டும்; என்னுடைய இறகில் அது இல்லே; என்ன செய்யலாம். கடவுள் உன்னே அப்படிப் படைத்தார், என்னே இப்படிப் படைத்தார்' என்று சொன்னது பெட்டை.

10. 'அம்மா, அப்படி எண்ணுதே. கடவுள் ஒருவருக்கும் ஒரு குறையும் செய்யார். அவரவர்களுடைய வாழ்க்கைக்கு ஏற்றது போல் எல்லாம் அமைப்பார். எனக்குக் குறை இல்லே யென்று நினேக்-

கிறாய். நான் தண்ணீரில் வசிக்கிறதற்குப் படைக்கப்பட்டேன். அதனால்தான் என் இறகில் தண்ணீர் ஒட்டாமல் அதில் ஒருவகைப் பசை ஏற்பட்டிருக்கிறது. தண்ணீரில் நன்றாய் நீந்துவதற்கு ஏற்றபடி தோலடிப் பாதமும் எனக்கு அமைந்திருக்கிறது. இதோ என் அலகைப் பார்; இது குட்டையாக இருக்கிறது, உன் அலகு கூர்மையாக இருக்கிறது, தண்ணீரில் உள்ள ஜந்துக்களைப் பிடித்தால், அவை நழுவிப் போய்விடும். அதனால் நன்றாய்ப் பிடிப்பதற்கு அகலமான அலகை எனக்குக் கடவுள் படைத்திருக்கிறார். நீ பூமியில் உள்ள தானியம், புழு முதலியவற்றைத் தின்னவேண்டி யிருப்பதால், உனக்கு அலகு கூர்மையாக இருக்கிறது. எனக்குத் தண்ணீரில் நீந்த வல்லமை உண்டு; உனக்குத் தரையில் ஓட வல்லமை உண்டு' என்று வாத்து சொல்லிற்று.

11. 'சரிதான், காரணம் சரியாகத்தான் இருக்கிறது. யோசித்துப் பார்த்தால்தான் எல்லாம் நன்கு விளங்கும். இருக்கட்டும், உமக்குமாத்திரம் கால்கள் பின்னால் இருக்கின்றனவே, அது என்ன? சொல்லும் பார்ப்போம்' என்று கேட்டது பெட்டைக்கோழி.

12. 'அதுவா, நான்தான் சொன்னேனே, நீ தரையில் வசிக்கிறாய், நான் தண்ணீரில் வசிக்கிறேன். தண்ணீரில் நீந்துவதற்குக் கால்கள் பின்னால் இருந்தால்தான் அநுகூலம். தரையில் ஓட என் கால் அநுகூலப் படாது. நான் ஓடும்போது என்னைப் பார்க்கிறவர்கள் நகைக்கிறார்கள் அல்லவா, என்ன செய்வது, என் நிலைமை இப்படி இருக்கிறது' என்று சொல்லிற்று வாத்து.

13. 'இருக்கட்டும், பேச்சிலேயே காலம் கழிந்து விடுகிறது, வயிற்றுக்கு ஏதேனும் வழி தேடுவோம். இதோ இங்கே நான் என் கால்களால் கிளறுகிறேன், ஏதாவது கிடைக்கும், அதைத் தின்னலாம்; நீரும் அந்தப் புறத்தில், கிளறும்' என்றது பெட்டை.

14. 'கிளறுவதா, என்னால் முடியாது! என் பாதம் நீந்துவதற்கே உபயோகமானது. என் காலால் பூமியைக் கீற முடியாது. உன்னால் எப்படித் தண்ணீரில் நீந்த முடியாதோ அப்படியே என்னால் பூமியைக் கீற முடியாது, இதோ என் பாதத்தைப் பார்; என் பாதம் தோலடி வாய்ந்தது. நகங்களும் தடித்திருக்கவில்லை' என்றது வாத்து.

15. 'சரி, நாம் ஒன்றுசேர்ந்து வேலை செய்யச் சரிப்படாது. உனக்கு ஏற்ற இடத்தில் நீ இரை தேடிக்கொள், எனக்கு ஏற்ற இடத்தில் எனக்கான இரையை நான் தேடிக்கொள்ளுகிறேன். இருவரும் சாப்பிட்ட பிறகு, எங்கேயாவது உலாவப் போகலாம்' என்றது பெட்டை.

## 10. மழை

இந்த உலகத்திலுள்ள பிராணிகள் உயிர் வாழ்வதற்கு முக்கியமான பொருள்களில் தண்ணீர் ஒன்று. தண்ணீருக்கு முக்கிய ஆதாரம் மழை. 'மாரியல்லது காரியமில்லை' என்றும், 'வானம் சுருங்கில் தானஞ்-

சுருங்கும்' என்றும் ஔவையார் அருளிச்செய்து இருக்கின்றனர்.

2. காலந் தவருமல் மழை பெய்தால் பயிர் பச்சைகள் எல்லாம் செழித்து வளரும். மழை பெய்வதனுல் ஆகாயம் சுத்தமாகின்றது. இனி மழை உண்டாவதன் காரணத்தை ஆராய்வோம் :

3. மழை உண்டாவதற்குக் காரணம் மேகமே. சிறிது ஜலத்தைக் கல்லின்மீது தெளித்தால், அது கொஞ்ச நேரத்திற்குள் உலர்ந்து விடுகிறது. ஈர வஸ்திரத்தை வெய்யிலிற் போட்டால், அதிலுள்ள ஈரம் போய், வஸ்திரம் உலர்ந்து விடுகிறது. ஒரு பாண்டத்தில் தண்ணீர் ஊற்றி நெருப்பின்மேல் வைத்துக் காய்ச்சினுல், தண்ணீர் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைகிறது.

4. இந்தத் தண்ணீர் எல்லாம் எப்படிப் போகின்றது என்று ஆராய்ந்து பார்த்தால், கல்லின்மீது தெளித்த தண்ணீரும், ஈர வஸ்திரத்தி லிருந்த தண்ணீரும் சூரிய உஷ்ணத்தினுல் ஆவி ரூபத்தை அடைந்தன. நெருப்பின் மீது வைத்துக் காய்ச்சப்பட்ட நீரோ நெருப்பின் சூட்டினுல் ஆவி ரூபம் அடைந்தது. இவ்வாறு ஆவி ரூபமடையும் ஜலவாயு சாதாரண வாயுவைக் காட்டிலும் லேசானபடியால் மேலே செல்லுகின்றது. இவ்வாறே ஆறு, ஏரி, சமுத்திரம் முதலிய நீர்நிலைகளிலுள்ள ஜலம் நாள்தோறும் சூரிய உஷ்ணத்தினுல் ஆவி ரூபமடைந்து மேலே செல்லுகின்றது. ஆவி ரூபமடைந்து மேலே செல்லுகின்ற நீராவி, எந்தக் காரணத்தினுலாவது

குளிர்ச்சியை அடைந்தால், கண்ணுக்குத் தோன்றும் உருவத்தை அடைகின்றது. இந்த நீராவித் திரட்-சியே மேகம் என்று சொல்லப்படும்.

5. மேகங்கள் பூமிக்கு இரண்டு மூன்று மைல் தூரத்தில் சஞ்சரிக்கின்றன. காற்றில் காகிதத் துண்டு முதலானவை பறப்பதுபோல, மேகங்களும் காற்-றினால் அங்குமிங்குஞ் சஞ்சரிக்கும். ஆகையால், காற்று வீசும்போது சாதாரணமாய் மழை பெய்யா-மல், காற்று நின்றவுடனே பெய்கின்றது. உலைப் பானையின்மேல் ஒரு சட்டியைக் கவிழ்த்து வைத்-தால், அந்தப் பானையிலுள்ள ஜலம், உஷ்ணத்தால் ஆவியாக எழும்பி, மூடியிருக்கும் சட்டியின் உட்-புறத்தில் போய்ப் படியும். அந்தச் சட்டியை எடுத்-துக் குளிர்ந்த காற்று முகமாகச் சாய்த்தால், அதில் அடைந்திருந்த நீராவி மறுபடியும் நீராக மாறி, துளித் துளியாகச் சொட்டும். அதுபோலவே நீராவியைக் கொண்டிருக்கும் மேகங்களின்மீது குளிர் காற்றுப் பட்டால், அந்த ஆவி நீராக மாறும். அந்த ஜலம் சாதாரண வாயுவைவிட அதிக கனமானபடியால், துளித்துளியாகப் பூமியின்மீது விழும்; இதுவே மழை என்று சொல்லப்படுகிறது.

6. மலைப்பிரதேசங்களிலும், மரங்கள் அடர்ந்த இடங்களிலும் மேகங்கள் அடுத்து உலாவும். ஆகை-யால், அவ்விடங்களில் மழை மிகுதியாகப் பெய்யும். பூமியின்மேல் எல்லா இடங்களிலும் மழை ஒரே அளவாகப் பெய்வதில்லை. ஆப்பிரிக்கா கண்டத்தி-லுள்ள பெரிய வனத்தின் சில பாகங்களைப் போன்ற

இடங்களிலும் அமெரிக்காவில் பெரு என்னும் தேச-த்திலும், மழை பெய்வதே யில்லை. சில இடங்களில் மிகக் கொஞ்சமாகப் பெய்யும். மற்றுஞ் சில இடங்-களில் எப்போதும் பெய்துகொண்டே இருக்கும்.

7. மழை பெய்வதனுல் ஜீவராசிக ளெல்லாம் உயிர் வாழ்கின்றன. மரம், செடிகள் விருத்தியா-கின்றன. ஆகாயம் சுத்தம் அடைகின்றது.

## 11. மலைகள்

'மணி ! இன்றைக்கு எங்கேயாவது போகலாமா எங்கே போகலாம் ? சொல்' என்முன் முத்து.

2. 'போகாமலா, எப்போது பொழுது விடியும் என்று எதிர்பார்த்திருந்தேன். நதிகள் மலையில் உற்-பத்தியாகின்றன என்று நேற்று சொன்னு யல்-லவா ? ஆகையால் இன்று நாம் வெளியே போய் ஏதேனும் ஒரு மலையைச் சுற்றிப் பார்த்து விட்டு வரலாம். மலையைப் பார்க்க வேண்டுமானுல் கொஞ்ச தூரம் போகவேண்டும்போல் இருக்கிறது. அதற்-கென்ன, ஒரு வண்டி வைத்துக்கொண்டு போக லாம்' என்முன் மணி.

[இருவரும் வண்டியேறி ஒரு மலை யடிவாரத்திற்குப் போகுர்கள் ?]

'மணி ! இதுதான் மலை ; கல்லும் மண்ணும் கலந்து மிகவும் உயர்வாக இருக்கிறது. இதன்மேல் மரங்-களும் புதல்களும் வளர்ந்து இருக்கின்றன. மலை

மேல் ஏறும்போது கஷ்டமாக இருக்கும். ஏறிப் பார்த்தால்தான் நன்றாய் விளங்கும். மலை, அடியில் அகன்று, போகப் போகக் குவிந்து இருக்கிறது. மலையை ஒருவாறு கோபுரத்திற்கு ஒப்பிடலாம். நாம் இப்போது மலையின் மேல் வந்துவிட்டோம். மலையின் முடிவுக்கு **மலையுச்சி** என்று பெயர். மலையின் மேலிருந்து அடிவரையில் பார், சரிவாகத் தோன்றுகிறது. அதற்கு **மலைச்சரிவு** என்று பெயர்.



மலையின் அடிப்பாகத்திற்கு **மலையடிவாரம்** என்று சொல்லுவார்கள். மலையின் அடிவாரத்திலிருந்து கொஞ்சம் தூரம்வரையில் பூமி சற்று உயர்வாகவே இருக்கும். இதற்கு **மலைச்சாரல்** என்று பெயர். மலை சிறியதாக இருந்தால் அதற்குக் குன்று என்று சொல்வது வழக்கம்.

3. மலையைப் பற்றிய விஷயம் இம்மட்டுந்தான் என்று நினைக்காதே. இதோ பார் சில மலைகள்

கும்பலாக இருக்கின்றன. அவற்றிற்கு **மலைத்தொகுதி** என்று பெயர். சில இடங்களில் மலைகள்



தொகுதியாக இராமல் ஒன்றை யடுத்து ஒன்றாகத் தொடர்ந்து செல்வதும் உண்டு. அவைகளுக்கு



**மலைத்தொடர்** என்று பெயர். இதோ பார், ஒன்றை யடுத்து ஒன்றாக இரண்டு மலைகள் காண்கின்றன.



இரண்டு மலைகளுக்கும் இடையில் பள்ளமாகத் தோன்றுகிறது. இப்படி இருக்கும் பாகம் **பள்ளத்தாக்கு** எனப்படும். இப்படி இரண்டு மலைகள் இணைந்திருக்கும் பாகத்தில் மனிதர் போக்குவரவு செய்யப் பாதைகள்

ஏற்பட்டு இருப்பதும் உண்டு. அந்தப் பாதைக்குக் கணவாய் என்று பெயர்.

4. இதோ இப்படி இறங்கி வா, நன்றாய்ப் பார். தண்ணீர் சலசலவென்று பாய்கிறது. இதுதான் ஊற்று நிலம். இந்த ஊற்று நிலத்தி லிருந்துதான் ஆறுகள் தோன்றுகின்றன. இந்த ஊற்றுநீரோடு மழைநீரும் கலந்து ஆறுகளாகப் பாய்கின்றன.



5. 'இதெல்லாம் ஆச்சரியமல்ல, மலையில் வேறு ஒரு வகை இருக்கிறதாம். நான் அதைப் பார்த்த-தில்லை. அவ்விதமான மலை நமது தேசத்தில் இல்லை. வேறு தேசங்களில் இருக்கிறதாம். அதைப்பற்றி நான் கேள்விப்பட் டிருக்கிறேன். அதை நினைத்-தாலும் பயமாக இருக்கிறது' என்றான் முத்து.

6. 'அதென்ன, நல்ல சமயத்தில் நிறுத்திவிட்-டாயே! மலையைப் பார்க்கப் பார்க்க மனம் சந்-தோஷம் அடைகின்றது. மலையில் வேறு வகை என்ன? தயவுசெய்து சொல்' என்றான் மணி.



7. 'சரி, சொல்லுகிறேன். இந்த மலையைப் பார்த்தாயே, இதன்மேல் என்ன இருக்கின்றது. மரமும் செடியும் புதல்களும் அடர்ந்து இருக்கின்-றன அல்லவா? அந்த மலைமேல் மரஞ் செடி ஒன்றும் இராது. அதன்மேல் ஒருவனும் ஏறமுடியாது. சில சமயங்களில் அதன் அடிவாரத்திலும் போக முடி-யாது. அதன் உச்சியில் எந்நேரமும் புகைந்து கொண்டு இருக்கும்; திடீரென்று பற்றிக்கொண்டு எரியும். புகை பல பக்கங்களிலும் கவிந்துகொள்-ளும். கல்லும் உருகி வழியும். இரவில் பார்த்தால் ஆகாயத்தில் பெரு நெருப்பு பிடித்து எரிவதுபோல் தோன்றும். இதற்கு எரிமலை என்று பெயர். இந்த

நெருப்பு அந்த மலைக்கு எப்படி ஏற்பட்டிருக்கிறது? அந்த மலையின் உச்சியிலிருந்து பூமிக்குள் துவாரம் செல்லுகிறது. அந்தத் துவாரம் பூமியின் நடுவரையில் சென்று இருக்கிறது. பூமியின் நடுவில் நெருப்பு உண்டு. அந்த நெருப்பு சில சமயங்களில் மேலெழுந்து எரிகிறது. அதனால்தான் அதற்கு எரிமலை என்று பெயர்' என்றான் முத்து.

8. 'அப்படியா, எரிமலையின் வரலாற்றைக் கேட்டால் எனக்கு பயமாகத்தான் இருக்கிறது. உனக்கு இதெல்லாம் எப்படியோ தெரிந்து இருக்கிறதே! ஊரைப்பற்றி தான் உனக்குத் தெரியும் என்று நினைத்தேன், உலகத்தைப்பற்றியும் தெரிந்திருக்கிறதே! இங்கு எத்தனைநாள் இருந்தாலும் எனக்குச் சலிப்பு ஏற்படாது' என்றான் மணி.

## 12. உடலின் அமைப்பு.

'எண்ஜாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்' என்னும் பழமொழியை நீங்கள் பலமுறையும் கேட்டு இருப்பீர்கள். அது எப்படி? சிரசில் கண், காது, மூக்கு, வாய் ஆகிய நான்கு சிறந்த உறுப்புகள் அமைந்திருக்கின்றன. கை, கால் இல்லாமல் ஒரு மனிதன் இருக்கலாம்; தலை இல்லாமல் இருக்க முடியுமா? முடியவே முடியாது. இங்கே தலையின் அமைப்பைக் கவனிப்போம்.

2. தலை உருண்டை வடிவமாக இருக்கிறது. அதன்மேல் மயிர் அடர்ந்து நீண்டு வளர்ந்திருக்கிறது. இப்படி இருப்பதற்குக் காரணம் யாது? தலை

தட்டையாக இருந்தால், ஏதேனும் தலைமேல் படும்-போது அதிக பலமாகப் படும். உருண்டையாக இருந்தால் அடி ஒரு-வாறு வழுக்கிப் போய்-



விடும். தலைக்குள் மூளை இருக்கிறது. மூளையே அறிவுக்கு இருப்பிடம். ஒருவன் யோசனை யில்லா-மல் ஒரு காரியம் செய்-தால், அவனைப் பார்த்து, 'உனக்கு மூளை இல்லையா?' என்று கேட்கிறோம். அந்த அருமையான மூளையைக் காப்பாற்றுவதற்கே தலை-மேல் மயிர் அடர்ந்து முளைத்திருக்கிறது.

3. தலையை அடுத்து நெற்றி அமைந்திருக்கிறது. நெற்றி என்பது மண்டை ஓட்டின் முன் பக்கமாம். அங்கே தசை கிடையாது. நெற்றிக்கும் கண்ணுக்கும் இடையில் புருவம் இருக்-கிறது. நெற்றியில் வியர்-வை ஒழுகினால், அது கண்ணில் விழாதபடி புருவம் அதைத் தடுத்துவிடுகிறது.

4. கண் புருவத்தின்கீழ் ஒரு கூட்டில் அமைந்து இருக்கிறது. ஒரு மனிதன் மாடியில் இருந்து ஜன்னலின் வழியாக நான்குபுறமும் பார்ப்பதுபோல, கண், தேகத்தில் உயர்ந்தபாகத்தில் இருந்து, எங்கும் பார்க்கிறது. கண்ணைக் காப்பாற்ற இரண்டு இமைகள் இருக்கின்றன. அவற்றில் மேல் இமை பெரியது, கீழ் இமை சிறியது. பெரியது அசையும், சிறியது அசையாது. இமையின் ஓரத்தில் உள்ள மயிர் கண்ணில் தூசு படியாமல் தடுக்கும்.

5. இரண்டு கண்களுக்கும் இடையில் மூக்கு அமைந்து இருக்கின்றது. மூக்கின் நடுவில் உள்ள தண்டு அதை இரண்டாகப் பிரிக்கின்றது. அதனால் மூக்குத் தொளைகள் இரண்டாக ஏற்படுகின்றன. மூக்கில் உள்ள மயிர் தூசு உள்ளே செல்லாமல் தடுக்கிறது. மூக்கிற்கும் கண்ணுக்கும் வழியுண்டு. அதனால், கண்ணில் கண்ணீர் வரும்போதெல்லாம் மூக்கைச் சிந்தும்படி நேரிடுகின்றது. மூக்கின் தொளைகள் மேல்வாயில் போய் முடிகின்றன.

6. வாய் மூக்கின்கீழ் அமைந்திருக்கிறது. நமது கை ஏதாவதுவஸ்துவை வாயண்டைக் கொண்டு போனால், அது இன்ன வஸ்துவென்று கண் தெரிவிக்கிறது. மூக்கு அப்பொருளின் வாசனையை உணர்த்துகிறது. ஒருசமயம் கண் மூடிக்கொண்டு இருந்தாலும், மூக்கு அப்பொருள் நல்லது அல்லது கெட்டது என்று வாய்க்குத் தெரிவிக்கிறது. அதனால், மூக்கு வாய்க்கு நேர் மேலே இருப்பது அதிக உபயோகமுள்ளதாம்.

7. வாய்க்குள் பற்கள் அமைந்து இருக்கின்றன. முன்வாயில் மேலும் கீழும் உள்ள பற்கள் தட்டை

யாக இருக்கின்றன. அவை பண்டங்களைக் கடிப்பதற்கு அநுகூலமானவை. கடைவாய்ப் பற்கள் அகலமானவை. அவை பண்டங்களை அறைப்பதற்குத் தகுதியானவை. நாக்கு ருசி பார்ப்பதும் அல்லாமல், பண்டங்களைப் பற்களின் பக்கமாகத் தள்ளவும் உதவுகின்றது. வாயிலுள்ள பண்டம் கீழே விழாமல் உதடுகள் தடுக்கின்றன.

8. கன்னத்தின் பக்கத்தில் காது அமைந்து இருக்கிறது. காது கேட்க உதவும். பக்கத்தில் இருந்து சத்தம் வந்தால், அதைக் காது ஏற்றுக்கொள்ளுகிறது. முன்புறத்திலிருந்து சத்தம் வந்தால், அதைத் தடுத்து உள்ளே செலுத்த, காது முன்புறம் தாழ்ந்தும் பின்புறம் உயர்ந்தும் இருக்கிறது. காதுக்குள் ஒருவித ஜவ்வு இருக்கிறது. அதன்மேல் சத்தம் தாக்குவதால் காதில் ஓசை கேட்கிறது. மேளத்தை அடித்தால் சத்தம் உண்டாவது உனக்குத் தெரியும் அல்லவா?

9. இதுவரையில் தலையின் பாகங்கள் முடிந்தன. தலையைக் கழுத்து தாங்கிக்கொண்டு இருக்கின்றது. தலை தன் இஷ்டப்படித் திரும்புவதற்கு ஏற்றவாறு கழுத்து அமைந்திருக்கிறது. கழுத்தின் வழியாக சுவாசக் குழையும் அன்னக் குழையும் செல்லுகின்றன.

10. கழுத்தின் கீழ் மார்பு இருக்கின்றது. மார்பை ஓர் எலும்புப் பெட்டி என்று சொல்லலாம். இந்தப் பெட்டியில் இருதயம் ஈரல் முதலிய சிறந்த உறுப்புகள் இருக்கின்றன. மார்பின் கீழ் வயிறு

அமைந்திருக்கிறது. வயிற்றில் குடல் முதலிய உறுப்புகள் அடங்கி இருக்கின்றன. மார்புக்கும் வயிற்றுக்கும் பின்புறமாக முதுகு ஏற்பட்டு இருக்கிறது. சிறு சிறு எலும்புகள் தொடர்ச்சியாக ஒன்றுசேர்ந்து முதுகந்தண்டாக இயன்று இருக்கின்றன. நம் இஷ்டப்படி குனியவும் நிமிரவும் அநுகூலமாக முதுகந்தண்டு அமைந்திருக்கிறது.

11. மார்பின் இருபுறங்களிலும் கைகள் அமைந்து இருக்கின்றன. கையில், தோள் முன்கை விரல் ஆகிய மூன்று பிரிவுகள் அமைந்து இருக்கின்றன. விரல்கள் மணிக்கட்டண்டைச் சேர்ந்து, போகப் போகத் தனித் தனியாகப் பிரிகின்றன. தோளுக்கும் முன் கைக்கும் இடையில் முழங்கை இருக்கிறது. ஒவ்வொரு கையிலும் ஐந்து விரல்கள் இருக்கின்றன. இவற்றில் நான்கு விரல்கள் ஒரு பக்கமாகவும் கட்டைவிரல் ஒன்றும் ஒரு பக்கமாகவும் பிரிந்து இருக்கின்றன. அப்படிப் பிரிந்து இராவிட்டால் எந்தப் பொருளையும் எடுக்க முடியாது. விரல்களுக்குக் கணுக்கள் இருக்கின்றன. கட்டை விரலுக்கு இரண்டு கணுக்களும் மற்ற விரல்களுக்கு மூன்று கணுக்களும் இருப்பதைப் பார். கணுக்கள் இல்லாவிட்டால் கையை மடக்க முடியாது. விரலின் நுனியில் நகம் வளர்ந்து இருக்கிறது. நகம் இல்லாவிட்டால் வஸ்துக்களைக் கிள்ளவும் உரிக்கவும் நம்மால் கூடுமா?

12. இனி, கால்களைப் பற்றிக் கவனிப்போம். கால்கள் இடுப்பிலிருந்து தொடர்ந்து பிரிகின்றன. தொடை, கணைக்கால், பாதம் என்று காலில் மூன்று

பிரிவுகள் இருக்கின்றன. முழங்கால் தொடையையும் கணைக்காலையும் சேர்க்கிறது. பாதத்திற்கும் கணைக்காலுக்கும் இடையில் ஓர் இணைப்பு இருக்கிறது. ஒவ்வொரு காலிலும் ஐந்து விரல்கள் இருக்கின்றன. கால் விரல்கள் மிகவும் குறுகலானவை. ஒவ்வொரு விரலிலும் இரண்டு கணுக்கள் இருக்கின்றன. கால் விரல்கள் குறுகி யிருப்பதனால், பூமியின்மேல் ஊன்றி நடக்க அவை அதிக அநுகூலமாக இருக்கின்றன.

13. இப்படியே ஒவ்வொரு உறுப்பும் ஏற்றவாறு உடலில் அமைந்திருக்கிறது. கடவுள் எதையும் காரணம் இன்றிப் படைக்கவில்லை; அனாவசியமாகவும் உண்டாக்கவில்லை. அவர் சம்பூர்ண ஞானமுள்ளவர். அவருடைய செய்கையில் குறைவும் ஏற்படுமோ !

14. இப்படிப்பட்ட அருமையான உடலை நமக்குத் தந்தருளிய அந்தக் கடவுளை நாம் எப்போதும் வணங்கி வாழ்த்துவோமாக.

## 13. பறக்கும் சிலந்தி

பறக்கும் ஜந்துக்களுக்கு இரக்கை இருப்பது உங்களுக்குத் தெரியுமே, அதனால் 'பறக்கும் சிலந்தி' என்றவுடனே அதற்கும் இரக்கைகள் இருக்கும் என்று நீங்கள் எண்ணுவீர்கள். இந்தச் சிலந்திக்கு இரக்கையே யில்லை. இரக்கை இல்லாமலே இது வெகுதூரம் ஆகாயத்தில் பறக்கும். இது எவ்வளவு ஆச்சரியம் பாருங்கள் !

172681

2. மனிதர் பெல்லூன் என்னும் புகைக்கூட்டில் ஏறி ஆகாயத்தில் போவதை உங்களில் சிலர் பார்த்திருப்பீர்கள்; சிலர் கேட்டு இருப்பீர்கள். அதுபோலவே இந்தச் சிலந்தியும் ஒரு தந்திர வகையால் ஆகாயத்தில் பறந்து செல்லுகிறது.



3. சில சமயங்களில் ஆகாயத்தில் பறக்கவேண்டும்என்னும் ஆசை சிலந்திக்கு உண்டாவது வழக்கம். அப்போது அது ஒருசெடியின்மேல் உட்கார்ந்து, ஒரு கிளையையாவது இலையையாவது கால்களால் உறுதியாகப் பற்றிக்கொண்டு, தன் உடலின் பின்பாகத்தை உயரத்தூக்குகிறது. பின்பு, தன் உடலிலிருந்து பட்டுப்போன்ற நூல்களை வெளி விடுகின்றது. சிலந்தி நூல் நூற்கும் சக்தியுடையது. அந்த நூல், அதிகமும் லேசானதால் காற்றில் பறக்க ஆரம்பிக்கிறது. அப்படிப் பல நூல்கள் படலமாக வெளிப்பட்டுக் காற்றில் பறக்கும். தன் உடலைத் தாங்கக்கூடிய அளவு நூல் வெளிப்பட்டுப் பறக்கிறது என்பதைச் சிலந்தி தெரிந்து கொண்டவுடனே, அது தான் பற்றிக் கொண்டிருந்த கிளையை விட்டுவிடுகின்றது. உடனே, நூல்களின் உதவியால் சிலந்தி காற்றில் பறக்க ஆரம்-

JB
031,6 N20

பிக்கிறது. எருக்கங்காய் முற்றி வெடித்தால் அதிலுள்ள விதை, அதைச் சேர்ந்துள்ள பஞ்சின் உதவியால் காற்றில் பறப்பதை நீங்கள் பார்த்திருக்-



கிறீர்கள் அல்லவா ? சில பிள்ளைகள் அந்த விதையை எடுத்து ஊதிக் காற்றில் பறக்கவிட்டு வேடிக்கை பார்ப்பதும் வழக்கம் அல்லவா ? அதுபோலவே இந்தச் சிலந்தியும் தன் உடலிலிருந்து உண்டான நூலின் உதவியால் காற்றில் பறந்துபோவது வெகு விநோதமாக இருக்கும்.



4. இப்படியே இந்தச் சிலந்தி வெகு தூரம் பறந்து செல்லும். பிரயாணம் செய்தது போதும் என்று அதற்குத் தோன்றினால், உடனே இறங்கிவிடப் பிரயத்தனம் செய்யும். எப்படி இறங்குவது ? இறங்க இஷ்டம் வந்தவுடனே, சிலந்தி தான் விட்ட நூல்களை

உள்ளுக்கு இழுத்துக் கொள்ளும். நூல் சுருங்கி-விட்டால் சிலந்தி தன் உடலின் பளுவினுல் கீழே இறங்கிவிடுகிறது.

5. பிள்ளைகளே, இது எவ்வளவு விந்தையானது! மனிதராலும் இப்படிச் செய்ய முடியுமா ? 'தேவ கன்னிகைகள் வந்தார்கள், பறந்தார்கள், போனுர்கள்' என்று கதைகளில் வாசிக்கிறோமே, அந்தக் கன்னிகைகளாக இந்தச் சிலந்தியைச் சிறப்பித்துச் சொல்ல-லாம் என்று உங்களுக்குத் தோன்றும் அல்லவா ?

## 14. திருட்டு விசாரணை.

குற்றம் செய்கிறவர்களை டாணுக்காரன் பிடித்துக்-கொண்டு போகிறுன் என்பது உனக்குத் தெரியும் அல்லவா ? டாணுக்காரன் குற்றவாளியைக் கொண்டு-போய் என்ன செய்கிறுன் ?

2. டாணுக்காரன் குற்றம் செய்தவனைப் பிடித்-துக் கொண்டுபோய் டாணுவில் அடைக்கிறுன். அவன் செய்த குற்றங்களை டாணுவில் இருக்கும் ஒரு புஸ்தகத்தில் எழுதிவைக்கிறுன். மறுநாள் குற்ற-வாளியை மாஜிஸ்ட்ரேட் என்னும் அதிகாரியிடம் அழைத்துக் கொண்டு போகிறுன். மாஜிஸ்ட்ரேட் குற்றவாளியை விசாரித்துத் தக்கவாறு தண்டிக்கிறுர்.

[மாஜிஸ்ட்ரேட் குற்றவாளியை விசாரிக்கிறுர்.]

**சேவகன்** — 600 ஆம் நம்பர் தெய்வசிகாமணீ !

**டாணுக்காரன்** — ஆஜர்.

**மாஜிஸ்ட்ரேட்** — உன் பேர் என்ன ?

**டாணாக்காரன்** — என் பேர் தெய்வசிகாமணி.

**மாஜிஸ்ட்ரேட்** — உன் நம்பர் என்ன?

**டாணாக்காரன்** — அறுநூறு.

**மாஜிஸ்ட்ரேட்** — என்ன சங்கதி ?



**டாணாக்காரன்** — மயிலாப்பூரில் நேற்று உற்சவம் நடந்தது. பந்தோபஸ்துக்காக நான் அங்கே போயிருந்தேன். குளத்தண்டை ஜனங்கள் கூட்டமாக இருந்தார்கள். கூட்டத்தில் திடீ-ரென்று கூச்சல் கேட்டது. நான் உடனே போ-னேன். இந்தக் குற்றவாளி ஓடிக்கொண்டு இருந்தான். ஜனங்கள், 'அவன்தான் அவன்-தான்' என்று குற்றவாளியைக் காட்டினார்கள். உடனே நான் பின் தொடர்ந்து ஓடிப் போய்

குற்றவாளியைப் பிடித்துப் பரிசோதித்தேன். இந்த முத்து மாலை அவன் மடியில் இருந்தது. பிறகு டாணாவுக்கு இட்டுக்கொண்டு போய் வாக்குமூலம் வாங்கினேன்.

**மாஜிஸ்ட்ரேட்** — சொத்துக்கு உடையவர்கள் வந்திருக்கிறார்களா ?

**டாணாக்காரன்** — குழந்தையும் தகப்பனாரும் வந்து இருக்கிறார்கள்.

**மாஜிஸ்ட்ரேட்** — (தகப்பனாரைப் பார்த்து) இது உம்முடைய நகைதானா ?

**தகப்பனார்** — ஆமாம், என் குழந்தை அணிந்திருந்த நகைதான்.

**மாஜிஸ்ட்ரேட்** — (குழந்தையைப் பார்த்து) பிள்ளாய் ! இந்த மனிதனை நீ எப்போதாவது பார்த்து இருக்கிறாயா ?

**பிள்ளை** — ஓ, பார்த்திருக்கிறேன் ; நேற்று இவன் என் கழுத்தில் இருந்த மாலையை அறுத்துக்கொண்டு ஓடினான். நாங்கள் கூச்சலிட்டோம். அப்போது இந்த டாணாக்காரர் ஓடிப் போய் பிடித்துக்கொண்டார்.

**மாஜிஸ்ட்ரேட்** — இந்த மாலை யாருடையது ? பார்.

**பிள்ளை** — இதுதான் என்னுடையது.

**மாஜிஸ்ட்ரேட்** — குற்றவாளியின் மடியி லிருந்து மாலையை எடுத்தபோது யார் பார்த்தது ?

**டாணாக்காரன்** — முத்துசாமி செட்டியார் என்பவர் பக்கத்தில் இருந்தார், அவர் பார்த்தார்.

மாஜிஸ்ட்ரேட் — செட்டியாரே! இந்த விஷயமாக உமக்கு என்ன தெரியும்?

செட்டியார் — நேற்று இவன் ஓடிவந்தான், இந்த டாணுக்காரர் பின்னே ஓடிவந்து இவனைப் பிடித்துக்கொண்டார். பிறகு அவன் மடியைப் பரிசோதித்ததில் இந்த முத்துமாலை அகப்பட்டது.

மாஜிஸ்ட்ரேட் — (குற்றவாளியைப் பார்த்து) நீ என்ன சொல்லுகிறாய்?

குற்றவாளி — முத்துமாலை கீழே விழுந்து கிடந்தது; அதை நான் குனிந்து எடுத்தேன்; அதற்குள் எல்லோரும் கூவினார்கள்; நான் ஓடிவிட்டேன்.

மாஜிஸ்ட்ரேட் — மாலையை நீ எடுத்துக்கொண்டு ஓடினாயா? சும்மா ஓடினாயா?

குற்றவாளி — கீழே இருந்தது, அதை எடுத்துக் கொண்டுதான் ஓடினேன்.

மாஜிஸ்ட்ரேட் — கீழே விழுந்திருந்தால் அதை நீ எடுத்துக்கொண்டு ஓடிவிடலாமா?

குற்றவாளி — இவர்களுடையது என்று எனக்குத் தெரியாது.

மாஜிஸ்ட்ரேட் — இவர்களுடையது என்பது உனக்குத் தெரியாது. உன்னுடைய பொருள் அல்லாததை நீ எடுத்துக் கொள்ளலாமா? விழுந்து கிடக்கும் பொருளை ஒருவன் எடுத்தால், அது யாருடையது என்று விசாரிக்க வேண்டும். உடையவர் தெரியா விட்டால், அதை டாணாவில் கொண்டுவந்து ஒப்பிக்க வேண்டாமா?

குற்றவாளி — நான் அப்படி ஒப்பிக்கவில்லை.

மாஜிஸ்ட்ரேட் — நீ முத்துமாலை திருடியதாக உன்மேல் குற்றம் ஏற்படுகிறது. அதற்காக உன்னை இரண்டு மாதம் சிறைச்சாலையில் இருக்கத் தீர்ப்புச் செய்திருக்கிறோம், போ.

3. குற்றவாளியை டாணுக்காரன் அழைத்துக்கொண்டு போனான். அந்தப் பிள்ளையின் தகப்பனார் முத்து மாலையைப் பெற்றுக்கொண்டு, தன் பிள்ளையுடன் வீட்டுக்குச் சென்றார்.

## 15. வெட்டுக் கிளி

ஐயா, வெட்டுக் கிளியாரே! நீர் வெகு வேடிக்கையாக இருக்கிறீரே, க்ஷேமந்தானா? உமக்குக் கால்கள் இவ்வளவு நீளமாக இருக்கின்றனவே, அதென்ன? உடலுக்கேற்ற உறுப்புகள் இருக்க வேண்டாமா?

2. நீ கேட்பது சரிதான்; உறுப்புகளால் உண்டாகும் உபயோகத்தைப் பார்க்க வேண்டுமே யல்லாமல், அளவையும் அழகையும் பார்க்கக்கூடாது. இவ்வளவு நீளமான கால்கள் இல்லாவிட்டால், நான் இஷ்டமானபடி எகிறி எகிறிப் போக முடியுமோ? இதோ பார் எவ்வளவு வேகமாக எகிறுகிறேன். இப்படி உன்னால் எகிறிப் பாய முடியுமா? நான் இரண்டு விதமாக இடம்விட்டு இடம்போவேன். கொஞ்ச தூரம் குதித்துப் போவேன், கொஞ்சதூரம் பறந்து போவேன். எனக்கு இரக்கைகளும் இருக்கின்றன பார். நான் உட்கார்ந்துகொண்டு இருக்கும்

போது, எனக்கு இரக்கை இருப்பது நன்றாய்த் தெரி-யாது; என் இரக்கை மடக்கு விசிறிபோல் மடிந்து படிந்திருக்கின்றது. என் இரக்கையைக் காப்பதற்-குக் கவசமும் இருக்கிறது.

3. நான் கொஞ்ச தூரம் பறக்கிறேன்; என்னை உற்றுப் பார். என்னுடைய அழகான இரக்கைகளை நன்றாய்க் கவனி.



4. ஆஹா, எவ்வளவு அழகாக இருக்கின்றன. உன் இரக்கையும் ஏறக்குறைய பட்டாம் பூச்சியின் இரக்கையைப் போலவே இருக்கிறது. உனக்கும் பட்டாம் பூச்சிக்கும் ஏதேனும் உறவு உண்டோ ?

5. என் இரக்கை மாத்திரம் ஏறக்குறைய பட்டாம் பூச்சியின் இரக்கையைப் போலத்தான்

இருக்கும். ஆனால், அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. அப்பா, அது குழந்தையாக இருக்கும்போது புழுப்போல புரண்டுகொண் டிருந்தது, அப்போது நான் அங்கே இருந்தேன். நான் குழந்தையாக இருக்கும்போது ஏறக்குறைய இப்போது இருப்பதுபோலவே இருந்தேன். ஆனால், மிகவும் சிறியவனாக இருந்தேன். அப்போது எனக்கு இரக்கைகள் இருந்ததில்லை. நான் வளர வளர என் மேற்சட்டை உரிந்துவிட்டது. உனக்குச் சட்டை கிழிந்துபோய் விட்டால், உன் பெற்றோர் வேறொன்று தைத்துக் கொடுப்பார்கள் ; எனக்குக் கொடுப்பவர் யார்? என்னைப் படைத்தவர், ஒரு சட்டை போனால் என் உடலைக் காக்க வேறொன்று இருக்கவேண்டுமென்று உடனுக்குடன் ஏற்படுத்துகிறார். அதுதான் எனக்குப் புதிய சட்டை. என் உடலோடு ஒட்டினாற்போல் எனக்கு யாரேனும் தைக்க முடியுமா? இந்தக் காரியத்தில் கடவுள்தான் கைதேர்ந்தவர். நான் பெருகப் பெருக என்னுடைய பழைய உடை போய்விடும்; புதிய உடை தோன்றும்.

6. என்னுடைய இரக்கைகள்மட்டும் சிறிய வயது முதற்கொண்டே சிறிது சிறிதாக வளர்ந்துகொண்டு வந்தன. அவை இப்போது நன்றாய் வளர்ந்துவிட்டன. நானும் பூர்ணமாக வளர்ந்துவிட்டேன். இனிமேல் என் சட்டையை மாற்றவேண்டிய அவசியம் இல்லை ; இது சிதைந்தும் போகாது; இதை நான் கழற்றி எறியவும் முடியாது. எனக்கு எல்லாம் நிறைந்து இருக்கின்றது. இனி எனக்கு வேண்டியது ஒன்றும் இல்லை, நான் போய் வருகிறேன்.

# 16. தும்பி

குழந்தாய்! நீ என்னை ஏன் பிடிக்க முயல்கிறாய்? என்னைப் பிடிப்பதனால் உனக்கு என்ன வரும்? உன்னைப் போன்ற சிறுவர்கள் என்னைப் போன்ற சிறிய ஜந்துக்களைப் பிடித்து வதைக்கிறார்கள்; கால்களை ஒடிக்கிறார்கள்; இரக்கைகளைப் பிய்த்து விடுகிறார்கள்; சிலர் எங்கள் வால்களில் சுப்பலை நுழைத்துப் பறக்க விடுகிறார்கள். இப்படி யெல்லாம் செய்யலாமா? நாங்கள் உங்களுக்கு என்ன தீங்கு செய்கிறோம்? உங்களுக்கு ஒன்றும் செய்வதில்லையே! உங்களுக்குப் பெரும்பாலும் உபகாரமே செய்கிறோம். நான் எங்களுடைய சரித்திரத்தைச் சொன்னால் நீங்கள் எங்களைப் பிடித்து வதைக்கமாட்டீர்கள். என்னைப் பிடிக்காமல் சற்றுத் தூர நில், என் சரித்திரத்தைச் சொல்லுகிறேன், சரியாய்க் கேள்:

2. என்னைப் பார். நன்றாய்ப் பார். நான் அசையாமல் இருக்கிறேன்; என்னுடைய அழகான இரக்கைகளைக் கவனி. எத்தனை இரக்கைகள் இருக்கின்றன? நான்கு இரக்கைகள் இருக்கின்றன. என்னுடைய கண்களைப் பார். எனக்குப் பெரிய கண்கள் உண்டு; அவை மிகவும் பளபளப்பாக இருக்கின்றன. என் கண்களால் முன்னும் பின்னும் நன்றாய்ப் பார்ப்பேன், நீ என் பின்னால் மறைந்து வந்தாலும் எனக்குத் தெரிந்துவிடும்.

3. தம்பி, நான் உனக்குச் செய்யும் நன்மைகளைக் கேள்: நாங்கள் சிறு பூச்சிகளைப் பிடித்துத் தின்று ஜீவிக்கிறோம்; உங்களுக்குத் துன்பம் செய்கிற சிறு ஜந்துக்களை நாங்கள் நாசஞ் செய்-

தால் உங்களுக்கு இஷ்டந்தானே. கொஞ்ச நேரம் பார்த்துக்கொண்டேயிரு, எத்தனை கொசுக்களை நான் பிடித்துத் தின்றுவிடுகிறேன் பார். நான் ஓர் இடத்தில் அசையாமல் உட்கார்ந்திருந்து, ஏதாவது ஒரு பூச்சி வருமா என்று பார்த்துக்கொண் டிருப்பேன்.



ஏதாவது வந்தால், உடனே அதிக வேகமாக அதன்மேல்பாய்வேன். என்னிடத்தில் அகப்பட்டால் மறுபடியும் அது தப்பித்துக்கொள்ள முடியாது.

4. நீர் நிலைகளுக்கு அருகில் இருக்க எனக்கு அதிக இஷ்டம்; அது ஏன் தெரியுமா, சொல்கிறேன் கேள்: நீர்நிலைதான் எனக்குப் பழையவீடு. என்னைப் பார்த்தால் எப்போதாவது தண்ணீரில் வசித்திருந்தவனாக உனக்குத் தோன்றுகிறதா ? நான் தண்ணீரில் வசித்திருந்தபோது, எனக்கு இறக்கைகள் இல்லை. அப்போது நான் நீர்ப் பூச்சிகளைத் தின்றுகொண்டு இருந்தேன். அப்போது என் முகத்திற்கு ஒரு வகையான கவசம் இருந்தது; அதனால் பூச்சிகளுக்கு என் வாய் தெரிவதில்லை. நான் மெல்ல நீந்திக்கொண்டே போய், பூச்சிகளைப் பிடித்துக்கொள்வது வழக்கம். இப்படிக் கொஞ்ச காலம் தண்ணீரில் வசித்துக்கொண்டு இருந்தேன்.

5. சில நாட்களுக்குப் பிறகு என் தோலுக்கு உள்ளேயே இரக்கைகள் வளரத் தலைப்பட்டன. பிறகு பறக்கலாம் என்னும் துணிவு எனக்கு ஏற்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாகப் பறந்தேன்.





நீரிலுள்ள செடிகளின் மேலேயே நான் தவழ்ந்து கொண்டு இருந்தேன். பின்பு என் உடலின் கவசம் நீங்கி, இரக்கைகள் நன்றாய் வளர்ந்தன. அதுமுதல் என் பழைய வீட்டை விட்டுப் பறந்து போகத் தலைப்பட்டேன். ஆஹா, அப்போது எனக்கு உண்டான ஆனந்தத்திற்கு ஓர் அளவும் உண்டோ! சூரியனுடைய ஒளியைக் காணக் காண எனக்கு ஆனந்தம் மேலிட்டது. அதன் பிறகு ஆகாயத்தில் எங்கும்

பறந்து திரிய ஆரம்பித்தேன். இப்போது என் இஷ்டம்போல் இருக்கிறேன்.

6. தம்பி! உன்னோடு வெகுநேரம் பேசிக்கொண்டு இருந்துவிட்டேன். பசி காதை அடைக்கிறது. இனி, சும்மா இருக்க என்னால் முடியாது. இதோ ஒரு பெரிய கொசு வந்திருக்கிறது; அதைப் பிடித்துத் தின்ன வேண்டும். நீ போய் வருகிறாயா?

## 17. வேர்

இதோ ஒரு மரம் இருக்கிறது பார். மரத்திற்கு வேர், அடிமரம், கிளை, இலை, பூ, காய், கனி, விதை ஆகிய முக்கியமான உறுப்புகள் இருக்கின்றன. இவைகளில் வேர் தவிர மற்ற உருப்புகள் எல்லாம் பூமிக்கு மேல் இருக்கின்றன. வேர் மாத்திரம் பூமிக்குள் சென்று பரவி இருக்கின்றது. மரத்தை வேரோடு பிடுங்கிப் பார்த்தால், மரத்திற்கு அடிப்புறத்திலும் கிளைகள் பரவி இருப்பதுபோல் தோன்றும். மேலே இருக்கும் கிளைகளில் இலைகள் இருக்கும். கீழே இருக்கும் வேராகிய கிளையில் இலைகள் இரா. மரத்தில் மற்றப் பாகங்கள் பசுமையாக இருக்கும். வேர்மாத்திரம் பசுமையாக இராமல் ஒருவாறு வெளுத்துக் காணப்படும்.

2. மரத்திற்கு வேரினால் உண்டாகும் உபயோகங்கள் இரண்டு. முதலாவது, மரம் கீழே விழாதபடி அதை வேர்களே உறுதியாகப் பற்றிக்கொண்டு

இருக்கின்றன. இரண்டாவது, மரத்திற்கு வேண்டிய உணவை வேர்கள் பூமியிலிருந்து கிரகித்துக் கொடுக்கின்றன. வேர்கள் எப்போதும் கீழ்நோக்கிப் பூமிக்குள்ளே செல்லும். ஏன் தெரியுமா? அவைகளுக்கு ஏற்பட்ட இரண்டு வேலைகளையும் சரிவரச் செய்வதற்கே வேற்கள் அவ்வாறு செய்கின்றன.



3. வேர்கள் பலவகையாக இருக்கும். இதோ இருக்கும் நெற்பயிறைப் பிடுங்கிப் பார். அதன் வேர் எப்படி இருக்கிறது? நார்போல் இருக்கிறது. இதற்கு நார்வேர் என்று பெயர். ஒரு வருஷம் மாத்திரம் ஜீவித்திருக்கும் பயிர்களுக்கெல்லாம் நார்வேர் அமைந்து இருக்கும்.

4. இங்கே முள்ளங்கிக் கிழங்கு ஒன்று இருக்-கின்றது பார். கிழங்கும் ஒரு வகை வேர்தான். இந்த வேர் பருத்துச் சதைப்பற்று உள்ளதாக இருக்கிறது. இரண்டு வருஷம் ஜீவித்திருக்கும் பயிர்களுக்கெல்லாம் சதைப்பற்று உள்ள வேர்கள் இருக்கும்.



5. இதோ இந்த வேப்பமரத்தைப் பார். இதன் வேர் மரத்தைப் போலவே மிகவும் உறுதியாக இருக்கிறது. பெரிய வேரிலிருந்து சிறிய வேர்க-ளும் கிளைத்து இருக்கின்றன. அச் சிறிய வேர்கள் உணவைச் சேகரித்துப் பெரிய வேருக்கு அனுப்பு-கின்றன. பெரிய வேர் அந்த உணவை மரத்திற்கு அனுப்புகின்றது. இந்தப் பெரிய வேர்களுக்கு மர வேர் என்றும், பெரிய வேரிலிருந்து கிளைக்கும் சிறிய வேர்களுக்குப் பக்க வேர் என்றும் பெயர். பல வருஷங்கள் நிலைத்து வாழும் மரங்களுக் கெல்-லாம் மரவேர் உண்டு.

6. சில மரங்களுக்கு **ஆணி வேர்** என்பது ஒன்று உண்டு. அதற்கு **உச்சி வேர்** என்றும் பெயர். உச்சி வேர் நேராக வளர்ந்து பூமிக்குள் நீர்மட்டம் வரை-யில் நீண்டு செல்லும். அப்படிப்பட்ட மரங்களுக்-குத் தண்ணீர் ஊற்றி வளர்க்க வேண்டிய அவசியம் இல்லே. பனை, புளி முதலிய மரங்கள் இந்த இனத்-தில் சேர்ந்தவை.

7. மனிதருக்கு வாய் இருப்பதுபோல, மரத்-திற்கு வேர்கள் அமைந்து இருக்கின்றன. நமக்கு ஓரே வாய் இருக்கிறது. மரத்திற்கு அநேக வாய்-கள் இருக்கின்றன. வேர்கள் மரத்தை யடுத்து பல பக்கங்களிலும் பூமிக்குள் பரவிச் சென்று, மரத்-திற்கு வேண்டிய உணவைத் தேடிக் கொண்டுவரு-கின்றன. அதனுல், வேருக்கு ஏதேனும் கெடுதி உண்டாகும்போது மரம் பட்டுப்போகின்றது.

## 18. நெற்களம்

வேளாளன் நிலத்தை உழுது பண்படுத்தினுன், விதைத்தான், காலந் தவருமல் தண்ணீர் பாய்ச்சி-னுன், பயிர் வளர்ந்த பிறகு களே எடுத்தான். பயிர் விருத்தியாவதற்கு வேண்டிய பல காரியங்களும் செய்தான். பிறகு, அதன் பலனே அனுபவிக்க வேண்டாமா? பயிர் நன்ருய் வளர்ந்தபின், கதிர் வாங்கும். பிறகு கதிர்கள் எல்லாம் நன்ருய் முற்றித் தலேசாய்ந்து நிற்கும். தாளும் பழுத்துவிடும். அப்-போது வேளாளன் விளேச்சலே அறுவடை செய்ய ஆரம்பிப்பான்.

2. வேளாளன் தன் நிலத்திற்கு வேண்டிய ஆட்களை அமைத்துக்கொண்டு அறுவடை செய்வான். ஆட்கள் அரிவாள் எடுத்துக்கொண்டு தாளை அறுப்பார்கள். அறுத்த தாளை அரியரியாக வைப்பார்கள். எல்லாம் அறுத்த பிறகு, பல அரிகளை ஒன்றாகச் சேர்த்து கட்டாகக் கட்டுவார்கள். அந்தக் கட்டுகளை அந்த ஆட்கள் தலைமேல் சுமந்துகொண்டு போய் களத்தில் போடுவார்கள்.



3. கட்டுகளைக் களத்தில் கொண்டுவந்துபோட்ட பிறகு, அரியரியாக எடுத்து அடிப்பது வழக்கம்.



ஒருவன் அரிகளை எடுத்து மற்றொருவன் கையில் கொடுப்பான். அவன் தன்கையிலுள்ள கயிற்றால் கட்டி இறுக்கிக்கொண்டு, அரியைத் தரையில் அடித்து உதறுவான். அந்த அரியிலுள்ள நெல்லெல்லாம் கீழே உதிர்ந்து விடும். பிறகு, அந்தத் தாளை ஓரிடத்தில் போடுவான். ஒருவன் அந்தத் தாளையெல்லாம் குவித்து, போராகச் செய்வான்.

4. கட்டுகளை எல்லாம் அடித்த பிறகு, குடியானவன் அந்த நெல்லை முறத்தில் வாரித் தூற்றுவான்.

அப்போது நெல் வேருகவும் கரிக்காய் வேருகவும் பிரிந்து விடும். நன்ருய் முற்ருமல் உலர்ந்துவிட்ட நெல்லுக்குக் கரிக்காய் என்று பெயர். கரிக்காய்க்குள் ஒன்றும் இராது; அது உமிபோல் இருக்கும். அதனுல், நெல்லைத் தூற்றும்போது கரிக்காயெல்லாம் பறந்து அப்பால் போய் விழுந்துவிடும். நெல்மாத்திரம் தனியாகப் பிரிந்து ஓரிடத்தில் விழும்.

5. குடியானவன் நெல்லை ஓரிடத்தில் குவிப்பான். அந்த நெற்குவியலுக்கு அம்பாரம் என்று பெயர். மறுநாள் அம்பாரத்தை அளவிடுவான். அப்போது வேளாளன் தனக்கு உதவி செய்தவர்களுக் கெல்லாம் தானியம் கொடுப்பான். தச்சன், கருமான் முதலானவர்கள் உழவுக்கு வேண்டிய கருவிகளைச் செய்து கொடுத்தார்கள். ஆகையால், அவர்களுக்குக் குடியானவன் தானியம் கொடுக்கவேண்டியது அவசியம் அல்லவா? வண்ணுன், அம்பட்டன் முதலானவர்கள் தனக்குத் தொழில் செய்தார்கள். அதனுல், அவர்களுக்கும் குடியானவன் தானியம் கொடுக்கிருன். இப்படியே குடியானவன் தனக்கு உதவி செய்தவர்களுக் கெல்லாம் தானும் உதவிசெய்கிருன். களத்தண்டை அநேக ஏழை பரதேசிகள் வந்து காத்துக்கொண்டு இருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் குடியானவன் பிச்சை யிடுவான். வேளாளன் தாராள குணத்தை களத்தில்தான் காணலாம். பிறகு அளந்த நெல்லை மூட்டைகளாகக் கட்டி வண்டியில்ஏற்றி வீட்டிற்கு அனுப்புவான்.

6. மறுநாள் குடியானவன் போர் தள்ளுவான். நேற்று தாளை அடித்துப் போராகப் போட்டான் அல்லவா? அதைத் தள்ளிப் பரவலாகச்

செய்து, மாடுகளை வரிசையாகக் கட்டிப் பிணை-யடிப்பான். மாடுகளை வரிசையாகக் கட்டி வைக்-கோலைமிதிக்கச் செய்வதற்குப் பிணையடித்தல் என்று



பெயர். பிணையடிக்கும்போது, தாளில் ஒட்டிக்-கொண்டு இருக்கும் நெல் மணிகள் உதிர்ந்து விடும்.



நன்ருய்ப் பிணையடித்த பிறகு வைக்கோலை யெல்லாம் வேருகப் பிரித்து, நெல்லைத் திரட்டி வாரித் தூற்று-வான். நெல் எல்லாம் வேருகப் பிரிந்து நிற்கும்;

அதையும் வாரி அளந்து மூட்டை கட்டி வீட்டுக்கு அனுப்புவான்.

7. பிறகு, நெற்களத்தில் வைக்கோல் மாத்திரம் போராகக் குவிந்திருக்கிறது. வேளாளன் தனக்கு ஓய்வான தினத்தில் அந்தப் போரைத் தள்ளி, வைக்கோலைச் சுமையாகக் கட்டி, வண்டியில் ஏற்றி வீட்டுக்கு அனுப்புவான். இதனோடு வேளாளன் வேலை முடிந்தது. சிலநாள் பொறுத்து மறுபடியும் முன் போல் பயிர்செய்ய ஆரம்பிப்பான். உலகத்திலுள்ள தொழில்கள் எல்லாவற்றிலும் இந்தப் பயிர்த்தொழிலே சிறந்தது.

நல்ல தேவாலயப் பூசனை நடப்பதும்
நாடோறும் மழை பொழிவதும்
நாடிய தபோதனர்கள் மாதவம் புரிவதும்
நவில் வேதவேதிய ரெலாம்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதும்
தோல்புவி செழிக்கு நலமும்
சுபசோப னங்களும் கொற்றவர்கள் செங்கோல்
துலங்குமனு நெறிமுறைமையும்
வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகர் கொள்விலையும்
விற்பனையும் அதிக புகழும்
மிக்க அதிகாரமும் தொழிலாளர் சீவனமும்
வீரரண சூரர் வலியும்
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினால் விளைவ தன்றோ.

## 19. ஜப்பானியச் சிறுவர்கள்

நமது நாட்டில் உள்ள சிறுவர்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்; அவர்களைப் பற்றிய விஷயமும் உங்களுக்குத் தெரியும். நமது தேசத்தில் அநேக ஜாதியார் இருக்கிறார்கள். ஒவ்வொரு ஜாதியாருக்கும் ஒருவிதமான உடையும் ஒருவிதமான வழக்கமும் ஏற்பட்டு இருக்கின்றன. இனி, தூர தேசங்களில் உள்ள சிறுவர்கள் எப்படி இருப்பார்கள் என்று அறிந்துகொள்ள உங்களுக்கு விருப்பம் இருக்கும் அல்லவா? இங்கே ஜப்பான் தேசத்துச் சிறுவர்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுகிறேன், கேளுங்கள்:

2. ஜப்பான் தேசம் ஆசியா கண்டத்திற்குக் கிழக்கே இருக்கிறது. அது பல தீவுகள் ஒன்றுசேர்ந்து ஒரு தேசமாக இருக்கிறது. ஜப்பான் சிறிய தேசமாயினும் சிறந்த தேசம். ஜப்பானியர் சிறந்த வீரர்கள். அவர்களுக்குத் தேசாபிமானமும் பாஷாபிமானமும் அதிகம். சிறுவர்கள் அதிக மரியாதையும் அடக்கமும் உள்ளவர்கள்.

3. ஜப்பானியர் வீடு வெகு விந்தையாக இருக்கும். சுமார் பதினைந்து ரூபாய் இருந்தால் ஒரு வீடு கட்டிவிடலாம். அவர்கள் காகிதத்தினாலேயே வீடு கட்டுகிறார்கள். ஜப்பான் தேசத்தில் அடிக்கடி பூமி அதிர்ச்சி உண்டாவது வழக்கம். அப்போது வீடுகள் விழுந்துவிடும்; அதற்காகவே அவர்கள் காகித வீடுகள் கட்டுகிறார்கள்.

4. ஜப்பான் சிறுவர்கள் அதிக மரியாதை உள்ளவர்கள் என்று சொன்னேன் அல்லவா? யாராவது விருந்தாளிகள் அவர்கள் வீட்டுக்கு வந்தால்,

அந்த வீட்டிலுள்ள சிறுவர்கள் ஓடிவந்து, வந்தனம் செய்து, வந்தவர்களுடைய பாதரக்ஷைகளைக் கழற்றி வைப்பார்கள். ஜப்பானியச் சிறுவர்கள் தங்கள் பெற்றோருக்கு மிகவும் உதவியாக இருப்பார்கள். இதோ இந்தப் பெண்ணைப் பார். தன் தாய்க்கு உதவியாக தன் தம்பியை முதுகில் சுமந்துகொண்டு போகிறாள். நமது நாட்டிலும் சிறு பிள்ளைகள் இப்படிச் செய்வது உங்களுக்குத் தெரியும் அல்லவா ?



5. ஜப்பான் சிறுவர்கள் ஜந்துக்களிடத்தில் அதிக பக்ஷமுள்ளவர்கள். நமது நாட்டில் சிறுவர்கள் நாயைக் கண்டால் கல்லை எடுக்கிறார்கள், அதை அடிக்கிறார்கள் ; ஜப்பான் சிறுவர்கள் அப்படிச் செய்வதில்லை. அவர்கள் கல்லை எடுத்தாலும், அதைக் கண்டு நாய் ஓடாது. ஏன் தெரியுமா ? தம்மை அடிப்பதற்காகக் கல்லை எடுக்கிறார்கள் என்று அந்த தேசத்து நாய்களுக்குத் தெரியாது. அந்தப் பிள்ளைகள் எவ்வளவு சிறந்த குணம் உள்ளவர்கள் என்பதை எண்ணிப் பாருங்கள் !

6. ஜப்பானியருக்குப் புஷ்பங்களின்மேல் அதிகப் பிரியம் உண்டு. அவர்கள் புஷ்பங்களைக் கொண்டு வீடுகளை அலங்கரிப்பதே பெரிய வேலையாக எண்ணுவார்கள். தாய் தந்தையர் தங்கள் சிறுமிகளுக்கு இந்த வேலையைக் கருத்துடன் கற்றுக்கொடுப்பார்கள். ஜப்பானியப் பெண்கள் வீட்டை அலங்கரிக்க நன்றாய்க் கற்றுக்கொள்ளவேண்டும்.

7. ஜப்பானியச் சிறுவர்களுக்கு வருஷத்தில் இரண்டு நாள் பண்டகைகள் உண்டு. ஒரு நாள் ஆண் பிள்ளைகளுக்கு உரியது ; ஒரு நாள் பெண் பிள்ளைகளுக்கு உரியது. இந்தப் பண்டகை நாட்களில் சிறுவர்களுக்குப் பெற்றோரும் உற்றோரும் பொம்மைகள் வாங்கிக் கொடுப்பார்கள். ஆண் பிள்ளைகள் துப்பாக்கி, வாள் முதலிய கருவிகளை வாங்கிக்கொள்ள இஷ்டப்படுவார்கள். பெண் பிள்ளைகள் சிறந்த பொம்மைகளைப் பெற்றுக் கொள்ள விரும்புவார்கள். இந்தப் பண்டகை நாட்களில் எல்லாக் கடைகளிலும் பொம்மைகளே நிறைந்திருக்கும்.

8. ஜப்பானியச் சிறுவர்களுக்குக் காற்றாடி விடுவதில் அதிக இஷ்டம் உண்டு. பெரியவர்களுக்கும் இந்த விருப்பம் விடுவது இல்லை. கிழவர்களும் காற்றாடி விடுவார்கள். நமது நாட்டில் காற்றாடி விடுவது உங்களுக்குத் தெரியுமே? நீங்களும் காற்றாடி விட்டிருப்பீர்கள். ஜப்பானியர் விதவிதமான காற்றாடி செய்வார்கள். பக்ஷிகளைப் போலவும் மீன்களைப் போலவும் செய்து பறக்க விடுவது வெகு வேடிக்கையாக இருக்கும்.



9. எல்லாம் சரிதான், ஜப்பானியச் சிறுவர்கள் படிக்கிறார்களா என்று எண்ணுவீர்கள். ஜப்பானியரில் படிக்காதவர்களே இல்லை. ஆண் பிள்ளையாயினும் பெண்பிள்ளையாயினும் கட்டாயம் படிக்க வேண்டும். ஒருவரும் படிக்காமல் இருக்கமுடியாது. அவர்களுக்குத் தேகபலமும் உண்டு; புத்தி பலமும்

உண்டு. ஜப்பான் தேசத்தில் வண்டி இழுப்பவனுக்-கும் படிக்கத் தெரியும். அந்தத் தேசத்தில் மனிதர் இழுக்கும் வண்டி உண்டு. அதற்கு ஜின்-ரிகி-ஷா என்று பெயர். அதில் மனிதர்கள் ஏறிக்கொண்டு போவார்கள். இந்த மாதிரி வண்டி சென்னபட்-



டணம் முதலிய நகரங்களில் இப்போது ஏற்பட்டு இருக்கின்றன. அதற்கு இங்கே ரிக்ஷா என்று சொல்லுகிறார்கள். அந்த வண்டியில் பெரியோரும் சிறியோரும் ஏறிக்கொண்டு, கூலி கொடுத்து, இஷ்ட-மான இடங்களுக்குப் போகிறார்கள்.

# 20. நாயின் நல்லறிவு

அமெரிக்கா கண்டத்தில் கானடா என்னும் தேசம் ஒன்று இருக்கிறது. அது நம்மை ஆளும் ஆங்கில அரசாட்சிக்கு உட்பட்டது. சில வருஷங்களுக்கு மூன்பு அந்தத் தேசத்தை கவர்னர் ஒருவர் ஆண்டு-வந்தார். ராஜத் துரோகிகளான சிலர் அவருக்கு விரோதிகளாக ஏற்பட்டனர். அவர்கள் சமயம் பார்த்து, அந்தக் கவர்னருக்கு ஏதேனும் தீங்கு செய்யத் தீர்மானித்து இருந்தார்கள்.

2. கவர்னர் ஒருநாள் வேட்டைக்குப் புறப்பட்-டார். அவருடன் முக்கிய உத்தியோகஸ்தர் சிலரும் புறப்பட்டார்கள். அவர்களில் சேனுபதி ஒருவர். கவர்னரும் சேனுபதியும் மனமொத்த நண்பர்கள். வேட்டை முதலிய காரியங்களுக்குப் போகையில் கவர்னர் சேனுபதியை அழைக்காமல் போவதில்லை. சேனுபதியும் அவரோடு போகாமல் நிற்பதில்லை. எல்லாம் சித்தமானவுடன் அனைவரும் வேட்டை-யாடக் காட்டிற்குச் சென்றார்கள்.

3. சேனுபதிக்குக் குமாரன் ஒருவன் உண்டு. அவன் சுமார் பதினைந்து வயதுள்ளவன். கவர்னர் வேட்டைக்குச் சென்ற பிறகு, ராஜத் துரோகிகள் கவர்னருக்கு ஏதோ தீங்கு செய்ய எண்ணுகிறார்கள் என்பதை அந்தச் சிறுவன் கேள்விப்பட்டான். அவ-னுக்கு மனம் தாளவில்லை. ‘இவ்வளவு நேரத்திற்குள் கவர்னர் முதலானவர்கள் வேட்டையாடும் இடத்-தைச் சேர்ந்திருப்பார்களே ; எப்படி இந்த விஷயத்-தைத் தெரியப்படுத்துவது ; தெரியப்படுத்தாவிட்-டால் தீங்கு நேர்ந்து விடுமே, என்ன செய்வது !’

என்று திகைத்தான். 'வேட்டையாடும் காடும் வெகு-தூர மாயிற்றே! எப்படிப் போவது! இப்போது புறப்பட்டாலும் வழியில் இருட்டிவிடுமே! ஒரு துணையிருந்தாலும் உடனே புறப்படலாம். துணையும் இல்லையே' என்று பலவாறு யோசித்துப் பரிதவித்துக்-கொண்டு இருந்தான். அப்போது, தான் வளர்க்கும் நாய் எதிரில் வந்தது. நாயைக் கண்டவுடனே, பையனுக்கு நல்லுணர்வு உண்டாயிற்று. 'இந்த நாய் இருக்கும்போது நமக்கென்ன பயம்; நாயே வழிக்கு நல்ல துணையாகும்' என்று மதித்து, அதைக் கூட்டிக்-கொண்டு புறப்பட்டான்.



4. புறப்பட்டதும், எங்கும் தங்காமல், நாய் தன்னைத் தொடர்ந்துவர, விரைவாக நடந்து சென்-ருன். பாதிவழிவந்தான். அங்கே புதல் அடர்ந்த

ஓர் இடம் இருந்தது. மனிதர் சிலர் அங்கு மறைந்து இருந்தார்கள். அவர்கள் இந்தச் சிறுவனைக் கண்டு, இவன் சேனுபதியின் குமார னென்று தெரிந்து கொண்டார்கள். இவனுக்கு நாம் செய்ய எண்ணி யிருக்கும் விஷயம் தெரிந்திருக்கும். அதனுல், அவ் விஷயத்தை தன் தந்தைக்குத் தெரிவிக்கப் போகி-ருன் என்று ஊகித்தார்கள்; உடனே அந்தச் சிறு-வனைப் பிடித்து அங்கு ஒரு வீட்டில் அடைத்து வைத்தார்கள். துணையாகச் சென்ற நாய் அச் சிறு-வனை விடாமல் தொடர்ந்தது. விரோதிகள் அந்த நாயை வெருட்டித் துரத்திஞர்கள். நாயோ, துரத்-தும்போது சிறிதுதூரம் ஓடிப் போய், பிறகு அந்த வீட்டண்டை ஓடிவரும். அந்த மனிதர்கள் அதை எத்தனை முறை அடித்துத் துரத்தியும், அந்த நாய் அகலாமல் அங்கேயே தங்கி யிருந்தது.

5. விரோதிகள் தங்களால் ஆனவரையில் அந்த நாயை அடித்தார்கள். உயிர் போனுலும் போகிற-தென்று நாய் அந்த இடத்தை விட்டு அப்புறம் போகாமலே இருந்தது. உடம்பெல்லாம் காயம்; இரையும் இல்லை, என்ன செய்யும்! எழுந்திருக்கவும் முடியாமல், அந்த நாய் பையன் சிறைப்பட்டிருந்த இடத்தண்டையே படுத்திருந்தது.

6. இவ்வாறு இரண்டு நாட்கள் சென்றன. வேட்டையாடச் சென்றவர்கள் இரண்டாம் நாள் மாலை திரும்பி வந்தார்கள். சிறுவன் சிறைப்பட்ட இடத்தண்டையே வந்து இறங்கிஞர்கள். ராஜத் துரோகிகள் அங்கே மறைந்து இருந்தார்கள். நாய் தன் எஜமானனைக் கண்டது. கண்டதும், எழுந்து ஓடிவந்தது. சேனுபதி தன் நாயைக் கண்டான்

அதன் உடல் முழுவதும் காயப்பட்டு இருப்பதை-யும், இரை யில்லாமல் அது இளைத்து இருப்பதையும் பார்த்து, அதிக விசனமுற்றான். நாய் உடனே எதிரில் இருந்த புதலண்டை ஓடிற்று. பிறகு சேனா-பதியிடம் ஓடி வந்தது. இப்படியே அந்த நாய் இரண்டு மூன்று முறை செய்தது. சேனாபதி புத-லண்டை ஏதோ ஒரு மிருகம் மறைந்திருக்கிறதென்று எண்ணி, உட்கார்ந்தபடியே துப்பாக்கியால் சுட்-



டான். சுட்டதும் புதலிலிருந்து இரண்டு பேர் கூச்ச-லிட்டு விழுந்தார்கள். மனிதக் குரல் கேட்கவே சேனாபதி மனந் துடித்து எழுந்து ஓடிப் போய்ப் பார்த்தான். மனிதர் என்று தெரிந்து வருந்தினான். அப்போது ஒருவன் சட்டைச் சாக்கில் ஒரு கடிதம் இருப்பதைக் கண்டான். அதை எடுத்து வாசித்த-

போது, அவர்கள் செய்ய எண்ணியிருந்த துரோக காரியம் வெளிப்பட்டது.

7. அதைக் கவர்னர் முதலானவர்கள் கண்டு, கடவுளுக்கு வந்தனம் செலுத்தினர்கள். நாயைத் தட்டிக்கொடுத்தார்கள். அப்போது சேனபதி இந்த நாய் இங்கே எப்படி வந்தது என்று எண்ணி-னன். நாய் எழுந்து எதிரிலிருந்த ஒரு வீட்டண்டை ஓடிற்று. சேனபதியும் இன்னும் சிலரும் அதனேடு சென்றனர்கள். அந்த வீடு பூட்டப்பட்டிருந்தது. சேன பதி அப் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்தான். தன் புத்திரன் களைத்து விழுந்து கிடப்பதைக் கண்-டான். இறந்துவிட்டானே என்று திகிலடைந்து எடுத்துப் பார்த்தான். கொஞ்சம் உயிர்ப்பு இருந்தது. உடனே முகத்தைக் கழுவி, தாகத்திற்குக் கொடுத்து, களைப்பை நீக்கி, என்னவென்று விசாரித்தான். சிறுவன் நடந்த விஷயங்களை வெளியிட்டான். அதைக் கேட்ட கவர்னர் முதலாயினர் சிறுவன் கொண்ட சிறந்த குணத்திற்கும், நாய் கொண்ட நல்ல உணர்ச்-சிக்கு மகிழ்ந்து புகழ்ந்தார்கள். இந்த ஒரு நாய் செய்த காரியம் எந்த வீரனவது செய்ய முடியுமா?

## 21. நாயின் வகைகள் — I

நாய் மிகவும் நன்றியுள்ள ஜந்து. நாய்கள் அவற்றின் தன்மைகளினல் பலவகைப் படுகின்றன. நாய்களை முக்கியமாக இரண்டு பிரிவில் அடக்கலாம். அவை குறுமயிர் நாய்கள், குச்சுமயிர் நாய்கள் என்பன-வாம். முதலில் குறுமயிர் நாய்களின் வகையைக் கூறுவோம்.

2. இதற்குப் பாளயக்கார நாய் என்று பெயர். இதன் உடல் நன்றாய் ஓடுவதற்கு அநுகூலமாக அமைந்திருக்கிறது. இதன் மார்பு அகன்று, வயிறு ஒடுங்கி இருப்பதோடு, கால்களும் மிகச் சிறுத்து நீண்டு இருக்கின்றன. அதனால், இது வெகு விரைவாக ஓடும். இதனோடு வேறு எதுவும் ஓட முடியாது. மார்புக்கூடு அகன்று இருப்பதனால், இந்த நாய் வெகுதூரம் ஓடினாலும் இளைப்பு உண்டாவதில்லை. இது முயல் வேட்டையாட அதிக உபயோகமானது.



பாளயக்கார நாய்க்கு மூக்கு மிகவும் குறுகியிருப்பதால் மோப்பம் பிடிக்க உதவியான நரம்புகள் ஏற்பட இடமில்லை. ஆகையால், இந்த நாய், பிராணிகளைத் தன் மோப்பத்தினால் தெரிந்துகொள்ளாமல், கண்களால் உற்றுப் பார்த்தே தெரிந்து கொள்ளுகிறது. இதன் பின் கால்கள் முன் கால்களைவிட அகன்று இருக்கின்றன. அவைகள் அகன்று இராவிட்டால் ஓடும்போது முன் கால்களோடு முட்டுப் படும். இதன் வால் எலியின் வால்போல் சிறித்து நீண்டிருக்கிறது.

3. இது நரிவேட்டை நாய் எனப்படும். இது சிறுவர்களோடு விளையாடுவதில் சிறந்த புத்தியுள்ளது. சிறுவர்கள் பந்து ஆடும்போது இதுவும் அவர்களோடு குதித்துக் குதித்து ஓடி யாடி விளையாடும். இந்த நாய் நன்றாய் மோப்பம் பிடிக்கும்; இதற்கு உற்றுப் பார்க்குந் தன்மை அதிகம்; முன் கால்கள் குட்டையானவை; இதன் மார்பின் நீளமும் முன்காலின் நீளமும் ஏறக்குறைய சமமாகவே இருக்கும். வயிற்றுப்புறத்தில் உடல் ஒடுங்கி



இருக்கிறது. அதனால், முன் காலைவிடப் பின் கால் நீண்டு இருக்கிறது. உடலின் மயிர் சிறுத்து வழுவழுப்பாக இருக்கும். உடலில் அங்கங்கே பட்டைகள் விழுந்து இருக்கும். நரி, மான், காட்டுப் பன்றி முதலியவற்றை வேட்டை யாடுவதற்கு இந்த நாய் அதிக உபயோகமானது. ஆனால், இது பாளயக்கார நாயைப்போல் அவ்வளவு வேகமாக ஓடாது. இதற்கு மோப்பம் பிடிக்கும் சக்தி அதிகமாக இருப்பதனால், மான் முதலிய மிருகங்களின் காலடிகளை மோந்துகொண்டே போய் அவைகளைக் கண்டு பிடிக்குந் தன்மையுள்ளது.

4. **இரத்த மோப்ப நாய்** என்று இதற்குப் பெயர். இதற்கு மோப்பம் பிடிக்கும் சக்தி அதிகம். கொலை நடந்த இடத்தில் இந்த நாயைக் கொண்டுபோய் விட்டால், கொலை செய்தவனை இந்த நாய் கண்டு பிடித்துவிடும். இது எப்படி அவனைக் கண்டு பிடிக்கிறது தெரியுமா? கொலை நடந்த இடத்தை இந்த நாய்க்குக் காட்டி விட்டால், அங்கிருந்து கொலை செய்தவன் போன காலடியை மோந்துகொண்டே போய், அவனைக் கண்டுபிடித்துவிடுகிறது. இந்த நாய் போலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு அதிக உபயோகமானது.





5. மிருகங்களை வேட்டையாட நாய்கள் உபயோகப்படுவது போலவே, பறவைகளை வேட்டையாடவும் ஒரு வகை நாய் உபயோகப்படுகிறது. இங்கே இருக்கும் நாய்க்குப் **பறவை வேட்டை நாய்** என்று பெயர். காடை, கவுதாரி, காட்டுக்கோழி முதலிய பக்ஷிகள் காட்டில் செடியடர்ந்த புதல்களில் மறைந்து வசிக்கும். அவைகளை வெளியில் துரத்தி வேட்டையாடினால், சில பக்ஷிகள் புதர்களின்

நடுவிலேயே விழுந்து விடும். அங்கே போக மனிதரால் முடியாது. அப்போது, இந்த நாயை ஏவினால், இது புதர்களில் புகுந்து அந்தப் பக்ஷிகளைக் கௌவி எடுத்துக்கொண்டு வந்துவிடும். சில சமயங்களில் இந்த நாய் தானாகவே புதர்களில் புகுந்து, பறவைகளை வேட்டையாடிப் பிடித்துக்கொண்டு வெளியே வருவதும் உண்டு.

6. இவை அனைத்தும் வேட்டை நாய்கள். இனி வீட்டு நாய்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வோம். நாம் நாய்களை வீட்டில் வளர்க்கிறோம். நாம் அவைகளைப் பக்ஷமாக வளர்த்தால், அவைகளும் நம்மிடத்தில் பக்ஷமாக இருக்கின்றன. இங்கே இரண்டு நாய்களைப்பற்றிக் கூறுகிறேன் :

7. இந்த நாயைப் பார், இதன் முகமும் உடலும் வெகு விகாரமாக இருக்கின்றன. தலை சதுர அளவாக இருக்கிறது. முகத்தில் மடிப்புகளும் விழுந்திருக்கின்றன ; வாய் அகன்று இருக்கிறது. இதைப் பார்க்கும்போதே பயங்கரமாக இருக்கிறது. இந்த நாய் இருக்கும் வீட்டில் திருடன் தலைகாட்ட முடியாது. திருடன் வந்தால் அவனை கடித்துப் பிடித்துக்கொள்ளும். தன்னைத் திருடன் வெட்டினாலும் அது அவனை விடாது. யஜமானன் வந்து சொன்னால்தான் விடும். இவ்வளவு உண்மையாக எந்த வேலைக்காரன் இருப்பான் !

8. மாஸ்டிப் (Mastiff) என்று ஒரு நாய் உண்டு. மாஸ்டிப் என்னும் பதத்திற்கு 'திருடனுக்குப் பயம் உண்டாக்குகிறவன்' என்று அர்த்தம். அதனால்

அதைச் சோர பயங்கரன் என்று சொல்லலாம். யஜமானன் வீட்டைப் பாதுகாப்பதில் இது அதிக



சாமர்த்திய முள்ளது. இந்த நாய் ஒன்று இருந்தால் வீட்டைப் பூட்ட வேண்டிய அவசியமே இல்லை.

## 22. நாயின் வகைகள் — II

இதுவரையில் குறுமயிர் நாய்களைப்பற்றிக் கூறி-னோம். இனி, குச்சிமயிர் நாய்களைப்பற்றிக் கூறு-வோம். குச்சுமயிர் நாய்களுக்குச் சடை மயிர் நாய்-கள் என்றும் பெயர்.

2. இதற்குப் பட்டி நாய் என்று பெயர். பட்டி நாயின் முகம் பாளயக்கார நாயின் முகத்தை ஒத்திருக்கிறது. மயிர் மாத்திரம் நீண்டு தொங்கு-கிறது. இந்த நாய் இடையனுக்கு உபயோக-மானது. ஆட்டு மந்தைகளை மடக்கும்; பனியிலும் மழையிலும் வெய்யிலிலும் அவனோடு திரியும்; குளிர் எடுத்தால் இடையன் கம்பளியைப் போர்த்துக்

கொள்வான். நாய் என்ன செய்யும்? அதற்கு இயற்கையாகவே போர்வை அமைந்து இருக்கிறது.



இந்த நாய் இரவில் விழித்திருந்து, நரி முதலிய துஷ்ட ஜந்துக்கள் வந்தால் தன் எஜமானுக்குக் குரைத்துத் தெரிவிக்கும்; சில சமயங்களில் அந்த ஜந்துக்களோடு சண்டை செய்து அவற்றைக் கொன்று விடும். தன் எஜமானனுடைய மந்தையிலுள்ள ஆடு வேறு மந்தையில் போகாமலும், வேறு மந்தையிலுள்ள ஆடு தம் மந்தையில் வாராமலும் பார்த்துக்கொள்ளும். இடையன் இல்லாவிட்டாலும் பட்டி நாய் ஆடுகளை மேய்த்துக்கொண்டு வந்து பட்டியில் அடைக்கும்.



3. இது ஒரு மலைநாய்; இதற்கு சேன்ட் பெர்னார்ட் நாய் என்று பெயர். மலை நாடுகளில் மழை அதிகம்; பனியும் அதிகம். பனிபெய்து வீடுகளை-

யும் மரங்களையும் மூடிக்கொள்வது உண்டு. மலை நாட்டில் வசிக்கும் மனிதர்கள் நடந்து போகும்போது பனிக்கட்டிகளால் சறுக்கி விழுந்து விடுவார்கள்; எழுந்திருக்க முடியாமல் விரைத்துக் கிடப்பார்கள். அவர்களைத் தேடிக்கொண்டு வெளியே போக மனிதருக்கு முடியாது. அப்போது இந்த நாயை அனுப்புவார்கள். அதன் முதுகில் ஒருபுறம் கொஞ்சம் உணவும் மறுபுறம் கொஞ்சம் சாராயமும் கட்டி, மேலே ஒரு கம்பளியைப் போட்டு அனுப்புவார்கள். இந்த நாய் மோப்பம் பிடித்து, மனிதர் இருக்கும் இடத்தை அறிந்துகொண்டு அந்த இடத்திற்குச் செல்லும். விழுந்து கிடப்பவன், சாராயத்தைக் குடித்து உணவை யுண்டு கம்பளியைப் போர்த்துக்கொண்டு எழுந்து வருவான். அவன் எழுந்துவர அசக்தனாக இருந்தால், அவன் உடையைக் கௌவிப் பிடித்து இழுத்துக்கொண்டு வீட்டுக்கு வரும். சிறுவர்களாக இருந்தால் தன்மேல் தூக்கிக்கொண்டு வரும். இதற்கு அதிக தேகபலம் உண்டு. ஆல்ப்ஸ் என்னும் மலையை அடுத்த நாடுகளில் இந்த நாயை அதிகமாக வளர்க்கிறார்கள். இந்த நாய் சற்றேறக் குறைய ஒரு கன்றுக்குட்டி யளவு இருக்கும்.

4. இது நியூபவுண்ட்லண்ட் நாய். அமெரிக்கா கண்டத்தில் 'நியூபவுண்ட்லண்ட்' என்னும் தீவு ஒன்று உண்டு. அங்கே இந்த நாய்கள் அபரிமிதமாக இருக்கின்றன. சென்ட் பெர்னட் நாய் நிலத்தில் விழுந்து மரிப்பவர்களைக் காப்பாற்றுகிறது; நியூபவுண்ட்லண்ட் நாய் நீரில் விழுந்து மரிப்பவர்களைக் காப்பாற்றுகிறது. இதன் உடலில் ஒரு வகை நெய்ப்-

பசை இருக்கிறது. அதனால் இந்த நாய் நீரில் குதித்து நீந்தும்போது இதன் மயிரில் தண்ணீர் அதிகமாக ஒட்டுவதில்லை. நியூபவுண்ட்லண்ட் தீவுக்கருகில் கடலில் அநேக பாறைகள் உண்டு. கப்பல்கள் அடிக்கடி அப் பாறைகளில் மோதுண்டு உடைந்துபோவது வழக்கம். அப்போது அதிலுள்ள ஜனங்கள் கடலில் விழுந்து முழுகிப்போவார்கள். அந்தச்



சமயத்தில் இந்த நாயை விட்டால், இது நீந்திச் சென்று, விழுந்தவனுடைய உடையையாவது சிகையையாவது பிடித்து இழுத்துக்கொண்டு வரும். கடல் எவ்வளவு கொந்தளிப்பாக இருந்தாலும் அஞ்சாது. இந்த நாய் அநேக உயிர்களைக் காப்பாற்றியதாகப் பல சரித்திரங்கள் வழங்குகின்றன.

5. **ஸ்பானியல்** என்று ஒரு வகை நாய் உண்டு. அது நன்றாய் நீந்த வல்லது. இதை நியூபவுண்ட்லண்ட் நாயின் இனத்தில் சேர்க்கலாம். இந்த நாய்

நீர் நிலைகளுக்கு அருகில் கூடு கட்டிக்கொண்டு வசிக்-கும் நீர்க்கோழி, உள்ளான், நாரை முதலிய பக்ஷி-களைப் பிடித்துக் கொண்டு வரும். நீரில் மேயும்



பக்ஷிகளைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டால், இந்த நாய் தண்ணீரில் நீந்திச் சென்று, விழுந்த பறவை-களை எடுத்துக்கொண்டு வரும்.

6. இன்னும் இந்த நாய்களைப்போல் எத்தனை-யோ வகை நாய்கள் உண்டு. ஒவ்வொன்றுக்கும் நுட்ப புத்தியும் நன்றியறிவும் ஏற்பட்டிருக்கின்றன.

## 23. நாய்

நன்றியுள்ள உயிரேது - நாயைப்போல
நன்றியுள்ள உயிரேது.

1. வளர்ப்பவ ரிடத்தினில் அன்பு-வைத்து
வாலை யாட்டிக் காட்டும் தெம்பு-மிக
உளத்திற் கோபமானல் முன்பு-பல்லை
உறுமிக் காட்டுமிதை நம்பு (நன்றி)

2. நாக்கைத் தொங்கவிட் டோடும்-வேறு
நாயைக் கண்டால் சண்டை போடும்-நம
வாக்கின்படி நடக்க நாடும்-தீனி
வயிற்றுக் கில்லாவிட்டால் வாடும் (நன்றி)

3. பத்திரமாய் வீட்டைக் காக்கும்-திருட்டுப்
பாதகரைக் குரைத்துப் போக்கும்-வாயில்
சித்தமாக விளக்கைத் தூக்கும்-வழியில்
நேருந் துன்பங்களை நீக்கும் (நன்றி)

4. ஆட்டு மந்தைகளை மடக்கும்-அதை
அகலாமல் இரவில் கிடக்கும்-ஒன்றும்
ஓட்டங் கொள்ளாமலே அடக்கும்-இடைய
னுடனே துணையாய் நடக்கும் (நன்றி)

5. காலத்தில் இரைதின்ன நாட்டம்-எலும்பு
கடித்திடவே கொண் டாட்டம்-பசைக்
காலத்தில் கொடுத்திட்டால் ஊட்டம்-ஒரு
காலும் செய்யா திருட் டாட்டம் (நன்றி)

6. நாயை வீணு யடிக்காதே-அன்பாய்
நடத்தினு லுனைக் கடிக்காதே-நீரை
வாயாலுறிஞ்சிக் குடிக்காதே-அது
வஞ்சனையாய் நடிக்காதே (நன்றி)



## 24. முயல் சிங்கத்தைக் கொன்ற கதை

குறுமுயல் சிங்கந் தன்னைக்
　　கொன்றதுண் டதனைச் சொல்வேன்
செறியும் ஓர் காட்டிலே ஓர்
　　சிங்கமுண் டந்தக் காட்டில்
உறுவிலங் கனைத்தும் வேட்டை
　　யாடி ஊன் மிகவும் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
　　விலங்கெலாம் ஒருங்கு கூடி

ஆணிளஞ் சிங்கமே உன்
　　அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டாம்
　　விதத்தினில் தினம் ஒன்றாக

ஊண் உனக் களிப்போம் என்ன
உண்மையாக் கொண்டு சிங்கம்
ஆணையு மிட்டொவ் வொன்றாய்
அருந்தி அங்கிருக்கும் நாளில்

தனிமுயல் ஒன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்
இனி அது விடாது நம்மை
எனினும் ஓர் எடுப்பெ டுத்து
வினையை இப்போது செய்து
வென்று நாம் உயர்ந்தோமாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும்
நமக்கும் நற்புகழ் உண்டென்றே

கருதிஅச் சிங்கத் தின் தன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி
மன்னன் என் பசிவேளைக்குப்
பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை பிந்தி
வருவதென் உரை நீ என்று
மனந்தனில சினந்து கூற

ஐயஉன் பசி வேளைக்கு
அடியனேன் வந்தேன் ஆங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவி அங்கு ஒளித்தி ருந்தேன்
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்
துய்ய உன் பக்கல் வந்தேன்
சுவாமி என் றிறைஞ்சி நிற்க

சிங்கம் நாம் அல்லால் வேறோர்
சிங்கம் நீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டவா என்
றழைத்தலும் அழைத்துப் போய் ஓர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட
அங்கதை எட்டிப் பார்க்க
அதனில் தன் உருவம் தோன்ற

தன் உரு நிழலைத் தானே
சத்துரு என்று பாய்ந்து
துன்னுபங் கத்த மூழ்கித்
துளங்கியே செத்த தன்றே
மன்னிய பகையா னாலும்
மதியினல் வெல்ல லாகும்
என்னு மோர் அரியநீதி
இக்கதை விளக்கு மன்றே.

அதிவீர ராம பாண்டியர்

அருளிச் செய்த

# வெற்றிவேற்கை

1. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்.
2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. மன்னர்க் கழகு செங்கோல் முறைமை.
5. மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்.
6. தந்திரிக் கழகு தருகண் ஆண்மை.
7. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
8. பெண்டிர்க் கழகெதிர் பேசா திருத்தல்.
9. அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
10. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.
11. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலாகாதே.
12. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
13. பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.
14. சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.
15. பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்.

16. உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்.
17. அடினுமா வின்பால் தன்சுவை குன்றாது.
18. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
19. அரைக்கினுஞ் சந்தனம் தன்மண மாறாது.
20. புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
21. கலக்கினுந் தண்கடல் சேறா காதே.
22. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே.
23. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர் கொள்ளாதே.
24. பெருமையுஞ் சிறுமையும் தான்தர வருமே.
25. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.
26. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.
27. கற்கை நன்றே கற்கை நன்றே.
28. பிச்சை புகினுங் கற்கை நன்றே.
29. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.
30. நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயின் கீழிருப் பவனே.
31. எக்குடி பிறப்பினும யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பார்.
32. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்.
33. யானைக் கில்லை தானமும் தருமமும்.
34. பூனைக் கில்லை தவமும் தயையும்.
35. ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்.
36. சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்.
37. முதலைக் கில்லை நீத்தும் நிலையும்.

38. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
39. நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
40. கேளுங் கிளையும் கெட்டோர்க் கில்லை.
41. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.
42. குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.
43. சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
44. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.
45. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே யழியினு மழிவர்.
46. எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பாழாகினு மாகும்.
47. மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி யணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.
48. பெற்றமுங் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தருஞ் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினு மாகும்.
49. இல்லோ ரிரப்பதும் இயல்பே யியல்பே.
50. இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே.
51. தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.
52. கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டின்
கடும்புலி வாழுங் காடு நன்றே.
53. சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்தேர் குரவர் தேயம் நன்றே.

54. குடியலைத் திரந்து கோலொடு நின்ற
முடியுடை யிறைவனும் மூர்க்கனும் பதரே.

55. முதலுள பண்டங் கொண்டுவா ணிபஞ்செய்
ததன்பய னுண்ணு வணிகரும் பதரே.

56. வித்தும் ஏரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.

57. தன்னு யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.

58. வாய்பறை யாகவும் நாக்கடிப் பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்.

59. பொய்யுடை யொருவன் சொல் வன்மையினுல்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.

60. மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

61. இருவர்தஞ் சொல்லையும் எழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மனுநெறி முறையின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளாகும்மே.

62. பழியா வருவதூஉம் மொழியா தொழிவது.

63. துணையோ டல்லது நெடுவழி போகேல்.

64. புணைமீ தல்லது நெடும்புன லேகேல்.

65. வழியே யேகுக வழியே மீளுக.

Printed at the Commercial Press, Madras, S. E.—1920.

10306

# சி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

புத்தக வியாபாரிகள், சென்னை

## பாட புத்தகங்கள்

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| முதல் பாட புத்தகம் ... ... | 0 | 2 | 6 |
| இரண்டாம் பாட புத்தகம் ... ... | 0 | 3 | 0 |
| மூன்றும் பாட புத்தகம் ... ... | 0 | 4 | 0 |
| நான்காம் பாட புத்தகம் ... ... | 0 | 5 | 0 |
| ஐந்தாம் பாட புத்தகம் ... ... | 0 | 7 | 0 |
| ஆறும் பாட புத்தகம் ... ... | 0 | 7 | 0 |
| ஏழாம் பாட புத்தகம் ... ... | 0 | 8 | 0 |
| எட்டாம் பாட புத்தகம் ... ... | 0 | 9 | 0 |
| ஒன்பதாம் பாட புத்தகம் ... ... | 0 | 9 | 0 |

## திராவிட வாசகங்கள்

| | | | |
|---|---|---|---|
| திராவிட பால பாடம் ... ... | 0 | 2 | 6 |
| முதல் திராவிட வாசகம் ... ... | 0 | 2 | 6 |
| இரண்டாம் திராவிட வாசகம் ... | 0 | 3 | 0 |
| மூன்றும் திராவிட வாசகம் ... ... | 0 | 4 | 0 |
| நான்காம் திராவிட வாசகம் ... | 0 | 5 | 0 |

## நூதன வாசக புஸ்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| நூதன முதல் வாசக புஸ்தகம் ... | 0 | 2 | 6 |
| நூதன இரண்டாம் வாசக புஸ்தகம் ... | 0 | 3 | 0 |
| நூதன மூன்றும் வாசக புஸ்தகம் ... | 0 | 4 | 0 |
| நூதன நான்காம் வாசக புஸ்தகம் .. | 0 | 5 | 0 |

## கணித புத்தகங்கள்

| | | | |
|---|---|---|---|
| புதுச் சட்டக் கணிதம் 4-ஆம் வகுப்பு | 0 | 7 | 0 |
| புதுச் சட்டக் கணிதம் 3-ஆம் வகுப்பு | 0 | 5 | 0 |
| புதுச் சட்டக் கணிதம் 1-2-ஆம் வகுப்பு | 0 | 2 | 6 |

COMMERCIAL PRESS, MADRAS.